# அஞ்சல்

UNITED KINGDOM 25 MAY 2012 PANNEWS

the Anchal


FREELY CIRCULATED TAMIL WEEKLY

TEL: 020-8422 5699 / 8429 5223

London
May 25, 2012
Vol: 5 No: 4




## ஆட்சியில் 60 ஆண்டுகள்: மக்களை வென்ற மகாராணி


Bringing
Great food
to
Life...
Niru BRAND
FALUDA
NET WT / POIDS NET : 290 ML
GOURMET CASSAVA CHIPS
ORIGINAL SALTED
CHILLI
CHILLI & LEMON
A TASTIER & HEALTHIER ALTERNATIVE TO POTATO CRISPS
Mango
Pineapple
Nelli Amla
Niru BRAND®
Quality you can taste
Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk

அஞ்சல்

25 MAY 2012 · UNITED KINGDOM · PANNEWS

the Anchal

FREELY CIRCULATED TAMIL WEEKLY

TEL: 020-8422 5699 / 8429 5223

London
May 25, 2012
Vol: 5 No: 4



ஆட்சியில் 60 ஆண்டுகள்: மக்களை வென்ற மகாராணி 6




# இரைச்சல் அயலவர் 2,500 பவுண் அபராதம்

இரைச்சல் ஏற்படுத்தும் அயலவர்மீது பொலீசார் நடவடிக்கை எடுக்கவும், 2ஆயிரத்து 500 பவுண்கள்வரை அபராதம் விதிக்கவும் புதிய சட்டம் அமுலுக்கு வருகிறது.

சமூக விரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் இப்புதிய நடவடிக்கைகளை உள்நாட்டு செயலாளர் திரேசா மே பாராளுமன்றத்தில் அறிவித்திருக்கிறார்.

இச் சட்ட சீர்திருத்தம், இரைச்சலான பாட்டுக்களை நிறுத்தச் செய்யும் அதிகாரத்தை பொலீசாருக்கு அளிக்கிறது. அத்துடன், மற்றைய குடியிருப்பாளர்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் விதத்தில் வளவினுள் குப்பைகளைக் குவித்தல் போன்ற நடவடிக்கைகளையும் இது தடுக்கும்.

'சமூக பாதுகாப்பு அறிவித்தல்' என்னும் இந்த உத்தரவுக்கு அமைய மறுப்பவர்களுக்கு 100 ஸ்ரேர்ளிங் பவுண்கள் உடனடி அபராதம் விதிக்கப்படும். இத்தகைய நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபடுபவர்கள்மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, 2 ஆயிரத்து 500 பவுண்கள்வரை அபராதம் விதிக்கப்படும்.

தற்போது, இத்தகைய அயலவர்கள் இரைச்சல் தொடர்பிலான விவகாரங்கள் கவுன்சில் அதிகாரிகளாலேயே கையாளப்படுகின்றன. இதனால் பலர், குறிப்பாக நள்ளிரவு வேளைகளில் உடனடி தலையீடு எதனையும் பெற முடியாமலுள்ளனர். இப்புதிய நடை முறை மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றமடையச் செய்யும் என்று திருமதி மே தெரிவிக்கிறார்.

அயலவரின் சமூக விரோத நடவடிக்கை தொடர்பில் குடியிருப்பாளர் ஒருவர் மூன்று தடவைகள் முறைப்பாடு செய்தாலோ அல்லது ஒரு விவகாரம் தொடர்பில்

ஐந்து குடியிருப்பாளர்கள் முறைப்பாடு செய்தாலோ பொலீசார் கட்டாய நடவடிக்கையில் ஈடுபடுவர்.



ஈஸ்ற்ஹாம், லண்டன் ஸ்ரீ முருகன் ஆலய தேர் உற்சவம் இம்மாதம் 27ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை காலை நடைபெறுகிறது.




# கௌரவமும் பாராட்டும்

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் இலங்கையரான மதியாபரணம் ரவிச்சந்திரா, பிரிட்டிஷ் மகாராணியின் அங்கீகாரத்துடனான 'அவுஸ்திரேலிய கட்டளை பதக்கம்'

வழங்கி கௌரவிக்கப்பட்டிருக்கிறார். கலைத்துறையிலான இவரின் சேவைக்காக இந்த கௌரவம் இவருக்கு ஏப்ரல் 20ஆம் தேதி மகாராணியின் சார்பில் அவுஸ்திரேலிய மகாதேசாதிபதியால் வழங்கப்பட்டது.

கடந்த சுமார் 30 ஆண்டுகளாக அவுஸ்திரேலியாவில் வசிக்கும் சிவில் பொறியியலாளரான திரு ரவிச்சந்திரா பிரபலமிக்க மிருதங்க கலைஞர். இதற்காகவே இந்த கௌரவம் இவருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

கர்நாடக இசைக் கலைஞர்கள் மத்தியில் நன்கு அறியப்பட்ட இவர், இலங்கையில் திரு ஏ. ஏஸ்.இராமநாதனிடமும் பின்னர் குரு காரைக்குடி மணியிடமும் பயின்றவர். அவுஸ்திரேலியாவில் இக் கௌரவத்தைப்பெற்ற முதல் ஆசியரான இவரைப் பாராட்டி வெம்பிளி, 253 ஈஸ்ற் லேனில் இம்மாதம் 25ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கும், மறுநாள் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு விம்பிள்டன் விநாயகர் கோவில் மண்டபத்திலும் இரு வைபவங்கள் நடைபெறுகின்றன.

இரு தினங்களும் திரு ஏ. ஜி. ஏ. ஞானசுந்தரத்தின் வயலின் நிகழ்ச்சியில் இவர் மிருதங்கம் வாசிக்கிறார்.

# கைத்தொலைபேசி: யமனின் புதிய வாகனம்?



கைத்தொலைபேசிகளில் பேசியபடியும், குறுஞ் செய்திகள் அனுப்பிய படியும் வாகனங்களில் பயணம் செய்வதால் ஏற்படும் பிரச்னைகள் இன்று பல நாடுகளிலும் பரவியுள்ளன. கைத்தொலைபேசி பாவிப்பில் முன்னணியில் நிற்கும் நாடுகளில் ஒன்றான அமெரிக்காவில் மட்டும் இத்தகைய விபத்துக்களால் ஆண்டு தோறும் ஐயாயிரத்துக்கும் அதிகமானோர் பலியாகி வருவதாகத் தெரியவந்துள்ளது. இவர்களில் இளம் வயதினர் அதிகம் என்பது கவலைக்குரிய செய்தி.

வாகனத்தை ஓட்டுபவர் கைத்தொலை பேசியில் பேசா விட்டாலும், அவர் அருகில் அமர்ந்து பேசிய-படி வருபவர்களாலும் சாரதியின் கவனம் சிதறி, அதனாலும் சில விபத்துக்கள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. ■

தேவை

**DISTRIBUTORS WANTED**

**Run your business without the usual risks and help people save money!**

- choose your own hours
- full training and support
- up-front bonuses
- earn a second income
- on-going commission

Find out more!
**Mr Santhan** - 07706633221
scssavemoney@gmail.com

அஞ்சல் சிறுவிளம்பரம்

கட்டணம்:
£2 per column cm

தொடர்புகொள்க:
Tel : 020-8429 5332
020-8422 5699
Fax : 020-8728 2334
Email : advert@theanchal.com

விற்பனைக்கு

PEUGEOT 306
Meridian 5 Door Saloon

S Reg. Good Condition
MOT
55,000 miles

**£549.00**


Contact: 07565 506563

## SUDOKU

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | | 8 | | | | 7 |
| | 1 | | | 6 | | | 5 | |
| 3 | | | 9 | | | | | |
| | | | 3 | | | | 1 | 4 |
| | | 7 | | | | 6 | | |
| 6 | 4 | | | | 7 | | | |
| | | | | | 2 | | | 5 |
| | 3 | | | 9 | | | 2 | |
| 5 | | | | 3 | | | 4 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 3 | | 6 | 7 |
| 1 | | | | 5 | 4 | | | |
| | 2 | 3 | | | | 8 | | |
| | | | | 3 | | | | 5 |
| 9 | | | 6 | | 8 | | | 2 |
| 6 | | | | 1 | | | | |
| | | 5 | | | | 1 | 4 | |
| | | | 9 | 6 | | | | 3 |
| 3 | 7 | | 2 | | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | 3 | 6 | | | | 4 | 5 |
| | 7 | | 1 | | | | | |
| 5 | | | | 8 | | | | |
| | 8 | | | | | 4 | | 1 |
| | 5 | | 4 | 7 | 8 | | 9 | |
| 7 | | 4 | | | | | 3 | |
| | | | | 3 | | | | 2 |
| | | | | | 1 | | 8 | |
| 4 | 2 | | | | 6 | 1 | | 3 |



## பிரித்தானிய செய்திகள்


# கைத்தொலை பேசிகளிலுள்ள தகவல்களைச் சேகரிக்கும் பொலீசார்



பொலீசாரினால் விசாரணைக்கு உள்படுத்தப்பட நேரிடும் பொது மக்களது கைத்தொலை பேசிகளின் தொடர்புத்தகவல்கள், குறுந் தகவல்கள் மற்றும் அவர்களது மின்னஞ்சல் பரிமாற்றங்களைப் பதிவுசெய்வதில் பிரித்தானிய பொலீசார் ஈடுபடுவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதற்கான புதிய தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தாகவும், கடந்த சில வாரங்களில் பல நூற்றுக்கணக்கானவர்களின் தனிப் பட்ட தொடர்புகளை பிரித்தானிய பொலீசார் பதிவுசெய்துள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைத்தொலைபேசிகளிலிருந்து ஒருவரது தனிப்பட்டதொடர்புகளைப்பதிவுசெய்து அவற்றை கண்காணிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கென லண்டனிலும் புற நகர்ப் பகுதிகளிலும் சிறப்பு பிரிவுகள் அமைக்கப்பட்டிருப்ப தாகவும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. ■

# ஆசியாவுடன் தரத்தில் குறைவடையும் ஜிசிஈ பரீட்சைகள்



ஐக்கிய இராச்சியத்தின் ஜிசிஈ சாதாரண தர, உயர்தர பரீட்சைகள் ஆசியாவின் அதேதர பரீட்சைகளைவிட இரண்டு தரங்கள் இலகுவானது என கல்வித்துறை ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது.

ஆசியாவின் ஹொங்கொங் நாட்டைச் சேர்ந்த ஜிசிஈ சாதாரணதர, உயர்தர மாணவர்களின் கல்வித்திறனுடன் ஐக்கிய இராச்சியத்தில் அதே தரங்களில் கல்விகற்கும் மாணவர்களின் தரத்தை ஒப்பிட்டு, இந்த முடிவு கண்டறியப்பட்டுள்ளது.

ஹொங்கொங்கின் ஜிசிஈ சாதாரணதர பரீட்சையில் 'பி' தரத்தில் சித்தியடையும் மாணவனால் ஐக்கிய இராச்சியத்தில் 'ஏ' அல்லது 'ஏ*' தரத்தை இலகுவாக பெற முடிவதாகவும், ஐக்கிய இராச்சிய ஜிசிஈ உயர்தர பரீட்சையில் 'ஏ' அல்லது 'ஏ*' தரத்தைப்பெறும் மாணவனால் ஹொங்கொங்கின் அதேதர பரீட்சையில் 'பி' அல்லது 'சி' தர புள்ளிகளையே பெற முடிவ தாகவும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

### வாகன தரிப்பு அபராதம்:

# ஒரு வீதியில் 1.2 மில்லியன் பவுண்கள்



லண்டனின் வாகன பாவனையாளர்களுக்கு பெரும் தலைவலியாக விளங்கும் வாகன தரிப்பு அபராதத்தின் மூலம் கடந்த ஆண்டு ஒரேயொரு வீதியில் மட்டும் 1.2 மில்லியன் ஸ்ரேர்ளிங் பவுண்கள் வருமானம் ஈட்டப் பட்டிருக்கிறது.

மத்திய லண்டனின் சதாம்ரம் வீதியில் நாளொன்றில் 50 வாகன உரிமையாளர்கள் அபராதம் விதிக்கப்பட்டிருக் கிறார்கள். கட்டணம் செலுத்தாது நிறுத்தப்பட்ட வாகனங்களுக்காக இந்த வீதியில் 19 ஆயிரத்து 335 அபராத சீட்டுகள் விநியோகிக்கப்பட்டு, அதன்மூலம் 19 லட்சத்து 9 ஆயிரத்து 870 பவுண்கள் வசூலிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, இரண்டாவது அதிக வருமானத்தை ஈட்டிய வீதியாக வடக்கு லண்டனின் கிறீன் வீதி விளங்குகிறது. கடந்த ஆண்டில் இந்த வீதியில் வாகனம் நிறுத்திய 14 ஆயிரம் வாகன உரிமை யாளர்கள், தண்டமாக 11 லட்சத்து 2 ஆயிரத்து 360 பவுண்கள் செலுத்தியிருக் கிறார்கள். தென்மேற்கு லண்டனின் கிளப்பம் பார்க் வீதி இப்பட்டியலில் மூன்றாம் இடத்தை வகிக்கிறது. ஏனைய வீதிகள்; நியூஹாம், பார்கிங் வீதி 725 ஆயிரத்து 438 பவுண்கள், ஈலிங், கிறீன் வீதி 541 ஆயிரத்து 7 பவுண்கள், றெட்பிரிட்ஜ், கிளெமென்ற்ஸ் வீதி 514 ஆயிரத்து 479 பவுண்கள், கவுன்ஸ்லோ, சிசிக் ஹை றோட் 484 ஆயிரத்து 816 பவுண்கள். ■

தங்கத்தைக் கொள்வனவு செய்பவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த 12 மாதங் களில் 59 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தங்கத்தில் முதலீடு செய்யப்பட்டிருப்பதாகவும், இது முன்னைய காலப்பகுதியை விட 16சதவீதத்தால் அதிக மானது எனவும் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

வங்கிகளிலும் ஏனைய வர்த்தகங்களிலும் பணத்தை முதலிடு வதைவிட, தங்கத்தைக் கொள்வனவு செய்து சேமிப்பது அதிக லாபம் தருவதும் பாதுகாப்பானது மென பெரும்பாலானவர்கள் கருதுவதே தங்க விலை அதிகரிப் புக்குக் காரணம் என்று கருதப் படுகிறது. ■



# அதிகரிக்கும் தங்க சேமிப்பு

13வது

ஆண்டில் காலடி எடுத்து வைப்பதை முன்னிட்டு

தீபம் தொலைக்காட்சி வழங்கும்

# வீசேட சலுகை

ஒரு வருட சந்தா புதுப்பித்தல்

# £35 மட்டுமே!

Tel: 020 8814 6565

www.deepamtv.tv

உலகத் தமிழருக்கு ஒரு தொலைக்காட்சி



# அஞ்சல்

வைகாசி 12, 2012

## எலிஸபெத் மகாராணி

எலிஸபெத் மகாராணியின் ஆட்சிக்கால வைரவிழா கொண்டாட்டங்கள் அடுத்த வார இறுதியில், மேலதிகமான வங்கி விடுமுறை தினத்துடன் நான்கு தினங்கள் உத்யோகபூர்வமாக கொண்டாடப்படுகின்றன.

நோயுற்றிருந்த தந்தையார் ஆறாம் ஜோர்ஜ் மன்னர் திடீரென்று மரண மானதும், கெனியாவில் சுற்றுலாவிலிருந்தவேளையில் இளவரசி எலிஸபெத் 1952 பெப்ரவரி 6ஆம் தேதி பிரிட்டனின் மகாராணியானார்.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் ஏற்பட்ட பங்கீட்டுத் திட்டம், பிரிட்டனில் அவர் பதவியேற்ற அவ்வேளையிலும் இருந்தது. அதன் பின்னரான 60 ஆண்டுகளில் பிரிட்டன் அடைந்துள்ள நிலைக்கு முழுமையும் அவர் பொறுப்பேற்கவோ அல்லது பெருமைகொள்ளவோ முடியாது. ஆனால், 2002ஆம் ஆண்டு அவரின் பொன்விழா கண்ட வெற்றி இந்த வைரவிழாவில் யதார்த்த மாகவே கிட்டுமா என்ற கேள்வி மிகுந்த கரிசனை சார்ந்து எழுப்பப்படுகிறது.

பல நூற்றாண்டுகளாகவே பிரிட்டிஷ் முடியாட்சியின் அதிகாரங்கள் பாராளுமன்ற அரசியலுக்கு சிறிது சிறதாக மாறிவந்தபோது, எலிஸபெத் மகாராணியின் இந்த நீண்ட ஆட்சிக் காலத்தில் முடிக்கு எதிரான எதிர்ப்புகளும் அதிகரித்தேயிருக்கின்றன. அரச குடும்பத்தின் தனிப்பட்டவர்கள்மீதும், பொதுவாக அரச குடும்பம் மீதும், முடியாட்சி முறைமைமீதுமாக எழும் இந்த உணர்வுகள் அந்த அமைப்பின் பெருமையையும் மதிப்பையும் முற்றிலும் மறுக்கவுமில்லை.

பொதுவாக, முற்றிலும் அரச வைபவமாகவே நடைபெறும் இத்தகைய விழாக்கள் இம்முறை மக்கள் களிக்கும் விதத்தில் நன்கு திட்டமிடப்பட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் கருதப்படுகிறது.

எனினும், முடியாட்சியில் முடிவை அல்லது மாற்றங்களை எதிர்பார்ப்பவர்களும் அந்த முடிவோ, மாற்றங்களோ நிகழாமல், இதே நிலைதான் தொடருமெனின், அந்த நிலையில் மிக உயர்ந்த ஒருவராக எலிஸபெத் மகராணியை பார்க்கிறார்கள்.

ஒழுக்கம், எளிமை, சர்ச்சையின்மை, சட்ட அமைவு, கடமை என்ற அவரின் பண்புகள் அவரை எல்லோரும் மெச்சவைக்கின்றன. இவரின் இத் தனிப்பட்ட பண்புகளில் மறையும் முடியாட்சியின் அசல் தோற்றம், இவரின் பின்னர் அசலாய் வெளிப்படும் என்றும் பெரிதும் பேசப்படுகிறது.

ஆக, 2015 செப்ரெம்பர் வரையிலான ஆட்சியில் மகாராணி பிரிட்டனின் மிக நீண்ட கால அரசி என்ற தனி கௌரவத்தையும் பெறுவார்.

## கருத்தரிப்பு சிகிச்சைக்கான வயது உயர்த்தப்படுகிறது

வேணவுக் கட்டுப்பாட்டை தீவிரமாக கடைப் பிடிப்பதன் மூலம் நீரிழிவு நோயை நிரந்தரமாக கட்டுப்படுத்தலாம் என்று நியூ காசில் பல்கலைக் கழக மருத்துவர்கள் கண்டறிந்துள் ளார்கள். குறைந்த கலோரி அளவு கொண்ட மாச்சத்து, கொழுப்புச் சத்து அற்ற தூய மரக்கறி உணவு வகைகளை மட்டும் உட்கொண்டு வந்த நீரிழிவு நோயாளர்களிடம் மேற்கொண்ட ஆய்வு வெற்றியளித்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள் ளார்கள்.

வேறுவிதங்களால் கருத் தரிக்க வியலாத பெண்கள், தேசிய சுகாதர சேவை யூடாக கருப்பைக்கு வெளியே கருவுறச்செய்யும் (ஐஏகு) சிகிச்சையைப்பெறும் வாய்ப்புக்கான வயதெல்லை 42 ஆக உயர்த்தப்படுகிறது. தற்போது, 39 வயதுக்கு உள்பட்ட பெண்கள் மட்டுமே தேசிய சுகாதார சேவை மூலம் (NHS) இந்த சிகிச்சையைப்பெறஅநுமதிக்கப் படுகின்றனர்.


இதுதவிர, மூன்று ஆண்டுகள் முயன்றும் பிள்ளைப்பேறு கிட்டாத தம்பதியருக்கு மட்டுமே வழங்கப்பட்ட இந்த வாய்ப்பு, இனி இரண்டு ஆண்டு களிலேயே வழங்கப்படும். இவர்கள் மாத்திரமன்றி, புற்றுநோய் மற்றும் வேறு வியாதிகளால் பாதிப்புற்ற நிலையில் கருத்தரிக்க விரும்புவோருக்கும் இந்த வாய்ப்பு அளிக்கப்படும்.

எனினும், இந்த கருத்தரிப்பு சிகிச்சைக்கான வாய்ப்பு மிகக் குறைந்த அளவிலேயே அளிக்கப் படுகிறது. குடும்ப வைத்தியர் இச் சிகிச்சைக்கு சிபார்சு செய்தாலும் குறித்த ஆரம்ப பராமரிப்பு நிதியமே

(PCT) சுகாதார சேவை யூடான இச் சிகிச்சைச்கான அநுமதியை தீர்மானிக்கும். பல நிதியங்கள் இச் சிகிச்சைக்கு பெருமளவு நிதியை ஒதுக்குவதில்லை. சுமார் 3 ஆயிரம் ஸ்ரேர்ளிங் பவுண்கள் ஒருவருக்கு இச்சிகிச்சைக்கு செலவாவ தாக அறிவிக்கப்படுகிறது.

இச்சிகிச்சையின் போது, பெண்ணின் சூலகத்தி லிருந்து சத்திரசி கிச்சைமூலம் முட்டை ஒன்று அகற்றப்பட்டு, ஆய்வு கூடத்தில் ஆணின் விந்துடன்கருவுறச்செய்யப்படும். உருவான சிசு பின்னர் கருப்பையுள் மீள செலுத்தப் பட்டு அங்கு வளர்ந்து விருத்தியுறும்.

இச் சிகிச்சையின் வெற்றி வாய்ப்பு வயது குறைந்த பெண் களில் அதிகமாகவுள்ளது. 2010ஆம் ஆண்டு 47 ஆயிரம் பெண்கள் இச் சிகிச்சையைப் பெற்றனர். ■



எலிஸபெத் மகாராணி வைர விழா

# ஆட்சியில் 60 ஆண்டுகள்: மக்களை வென்ற மகாராணி



■ மாலி

பாடசாலையில் பிரிட்டிஷ் தேசிய கொடி (யூனியன் ஜக்) அரைக்கம்பத்தில் பறக்கவிடப் பட்டபோது எல்லோர் மனதிலும் பலவிதமான யூகங்கள் எழுந்தன. ஒரு சிறுமி சொன்னாள்; "எலிஸபெத் இளவரசியை சிங்கம் கடித்துச் சாப்பிட்டு விட்டது போலிருக்கிறது."

இளவரசி எலிஸபேத்தும் கணவர் பிலிப் இளவரசரும் ஆறு தினங்களுக்கு முன்னர்தான் ஓய்வுக்காக கெனியா சென்றிருந்தார்கள். வன விலங்குகள் நிறைந்த காட்டுப்பகுதியில் மர உச்சியில் அமைந்த உல்லாச விடுதி ஒன்றில் அவர்கள் முதல்நாள் இரவு தங்கியமை செய்தியாக பிரிட்டனில் தெரிந்திருந்தது. ஆனால், இளவரசியாக அந்த மர உச்சியில் ஏறிய அவர், ஒரு வரலாற்று சாதனையுடன் மறுநாள் மகாராணியாக கீழே இறங்கினார்.

இங்கே பிரிட்டனில் அந்த இரவு, தந்தையார் ஆறாவது ஜோர்ஜ் மன்னர் நித்திரையில் காலமானார்.

ஜோர்ஜ் மன்னரின் மறைவை அறிவித்துத் தான் தேசிய கொடி அரைக் கம்பத்தில் பறந்த தென்பது பின்னர்தான் புரிந்தது.

அவுஸ்திரேலியா, நியூசிலாந்துக் குமாக திட்டமிடப்பட்டிருந்த இந்த சுற்றுப்பயணத்தில் 56 வயதான தந்தையார் ஜோர்ஜ் மன்னர் சுகவீனமுற்ற நிலையில் பயணம் செய்ய இயலாது போக, இளவரசி எலிஸபெத்தும் பிலிப் இளவரசரும் அப்பயணத்தைத் தொடர்ந்தனர். ஐந்து ஆண்டு களுக்கு முன்னர் மணமாகியிருந்த இளவரசிக்கு வயது 25.

புற்றுநோய் காரணமாக பல்வேறு சத்திர சிகிச்சைகளுக்கு உள்ளாகி, உடல்நிலை குன்றியிருந்த மன்னர், விமான நிலையத்தில் புதல்வியையும் கணவரையும் வழியனுப்பிவைத்தார். 1952 ஜனவரி 31 அது.

பெப்ரவரி 5ஆம் தேதி நைரோபியி லிருந்து நூறு மைல்கள் தொலைவில், வனவிலங்குகள் சரணாலயம் ஒன்றில் அவர்கள் அன்றைய பொழுதைக் கழித்தார்கள். கெனியாவின் பிரதம நீதியரசர் அளித்த அரச இராப் போசனத்தை முடித்து அந்த மர

# எலிஸபெத் மகாராணி வைர விழா







உச்சி உல்லாச விடுதியில் இரவு தங்கியபோது, இளவரசியின் அந்தரங்க செயலாளர் இளவரசர் பிலிப்பின் உதவியாளருக்கு மன்னர் மரணமாகி விட்ட செய்தியை தெரிவித்தார். அப்போது 6ஆம் தேதியாகியிருந்தது.

முடிக்குரிய வாரிசான இளவரசி எலிஸபெத், இப்போது எலிஸபேத் மகாராணி.

காலையில் அந்த மர உச்சி விடுதியிலிருந்து இறங்கி, 20 மைல்கள் தொலைவில், கெனிய அரசாங்கம் திருமணப் பரிசாக அவர்களுக்கு அளித்திருந்த தோட்டத்தில் அமைந்த ‘சகானா’ விடுதிக்கு வந்தபோது, தந்தையாரின் செய்தியை இளவரசர் பிலிப் தெரிவித்தார்.

25 ஆவது வயதில் மகாராணியான எலிஸபெத், தந்தையாரின் மரண துயரங்களை ஒருபுறம் வைத்துவிட்டு, தனது மீதி பயணங்களை தொடர வியலாது இரத்துச்செய்யநேரும் மன்னிப்புக் கடிதங்களை எழுதினார். உடனடியாகவே அவர் லண்டன் திரும்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டன. பிரதமர் வின்ஸ்ரன் சேர்ச்சில் மகா ராணியை வரவேற்றார்.

தந்தையாரின் மரணம் அதிர்ச்சியை அளித் தாலும், மிகவும் நோயுற்றிருந்த நிலையில் அதனை ஓரளவு அவர் எதிர்பார்த்துமிருந்தார். மன்னரும், தனது புதல்வியைத் தன்னுடைய அலுவல்களில் தனக்குப் பதில் ஈடுபடுத்தி, வெளிநாட்டுத் தலைவர்களுடன் பழகவைத்து, பலவிதங்களிலும் அவரைத் தயார் படுத்தியும் வந்தார்.

எதிர்பராதவிதத்திலேயே மன்னரான ஜோர்ஜ் மன்னர், பொதுவாகவே பெரிதும் மதிக்கப் பட்டார். இரண்டாம் உலக போரை எதிர் கொண்டார். பின்னர், அவரது உடல்நலம் குன்றத்தொடங்கியது.

மன்னர் ஆறாவது ஜோர்ஜின் மரணம் பெரு மளவு உணர்வைத் தூண்டாவிடினும், மிகுந்த மரியாதையுடன் உணரப்பட்டது. அந்த உணர்வில் இன்னோர் ஆவலும் கிளர்ந்தது.

அழகான, இளம் இளவரசி எலிஸபெத், மகாராணியாகிறார்!

1952 பெப்ரவரி 8ஆம் தேதி இளவரசி எலிஸபெத், சென் ஜேம்ஸ் மாளிகையில் நடைபெற்ற 20 நிமிட வைபவத்தில் மகாராணியாக தன்னை சம்பிரதாயபூர்வமாக பிரகடனப்படுத்தினார். பொதுநல நாடுகளின் தலைவியாகவும் அப்பிரகடனம் அமைந்தது. “என்னுடைய தந்தையாரின் திடீர் மறைவினால் ஆட்சியின் கடமைகளையும் பொறுப்புக்களையும் ஏற்க நான் விழைகிறேன். தன்னுடைய ஆட்சிக் காலம் முழுமையும் எனது தந்தையார் ஆற்றிய விதத்திலேயே, உலகம் முழுவதிலுமாக பரந்து வாழ்கின்ற எனது மக்களின் மகிழ்ச்சியையும்



# எலிஸபெத் மகாராணி வைர விழா

## மகாராணியின் இலங்கை விஜயம்



**முதலாவது விஜயம்: 1953 ஏப்ரல் 10 - 23.**


"...வெயில் அதிகமாகவிருந்ததால் சிகிரியா உச்சியில் ஏறுவதற்கு இளம் மகாராணி பருத்தி பாவாடையைத் தேர்ந்திருந்தார். திடீரென்று வீசிய சூழல் காற்றில் அவரது பாவாடை மேலே கிளம்பியது. அடக்கமுடியாதவராக சேர் ஜோன் (பிரதமர் கொத்தலாவல), "எடடா, எடடா..." என்று சிங்களத்தில் தனது உத்தியோகபூர்வ படப்பிடிப்பாளர் ரென்ஸி விஜேரத்தினவிடம் சொன்னார்."

**- பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலயின் செயலாளராக விருந்த பிரட்மன் வீரக்கோன்,** Rendering Unto Caesar **என்ற அவரது நூலில்.**

**இரண்டாவது விஜயம்: 1981 ஒக்ரோபர் 21 - 25.**

சுமார் நூறுக்கும் மேற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகையாளர்களில் 40 பேரைத் தேர்ந்து, மகாராணி ஒரு தனிப்பட்ட தேநீர் விருந்து அளித்தார். உடனிருக்கும் அமைச்சரான காமினி திசாநாயக்க,'யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும்'ஈழநாடு' பத்திரிகையைச் சார்ந்தவர்' என்று என்னை அறிமுகம்செய்தார். உடனே பிலிப் இளவரசர் என்னிடம் கேட்டார்; "நான் யாழ்ப்பாணம் செல்வது பாதுகாப்பானதா?"

**- மாலி**



சுபீட்சத்தையும் பெருக்க நான் எப்போதும் உழைப்பேன் என்றுசொல்வதில் என் உள்ளம் பெருநிறைவடைகிறது" என்று அவர் பிரகடனம்செய்தார்.

ஐம்பது மில்லியன் சனத்தொகையைக் கொண்டிருந்த பிரிட்டனில் அப்போது ஒன்றரை மில்லியன் தொலைக்காட்சிப் பெட்டிகளே இருந்தன. மூன்று தினங்கள் வெஸ்ற்மின்ஸ்ரர் மண்டபத்தில் மன்னரின் பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பபட்டிருந்தபோது, சுமார் 3 லட்சம் மக்கள் அஞ்சலி செலுத்தினார்கள்.

வின்சர், புனித ஜோர்ஜ் தேவாலயத்தில் பெப்ரவரி 15ஆம் தேதி அவரின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

மரண ஊர்வலம் தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டாலும், ஆராதனைகள் ஒலிவடிவில் மட்டுமே இடம்பெற்றன. தொலைக்காட்சி, ஓர் அந்தரங்க ஊடுருவலாகவே அப்போது பெரும்பாலும் கருதப்பட்டது. 'உலகின் மிகப்பெரும் ஆபத்து இது' என்றுதான் கன்ரபரி ஆயர் அப்போது தொலைக்காட்சியை அடையாளப்படுத்தினார்.

ஆனாலும், தொலைக்காட்சி மோகத்தை ஏற்படுத்தியெழுந்த முதல் பேரலையாக இது அமைந்தது.

1953 ஜூன் 2ஆம் தேதி எலிஸபெத் மகாராணியின் முடிசூட்டுவிழா நடைபெற்றது. வானிலை அவதானிகளின் ஆலோசனையுடன் பிரகாசமான கோடை நாளாக அது நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், பிரிட்டிஷ் சாம்ராஜயத்தின் பேரரசியைப் போற்றி, மாமழையும் அன்று வாழ்த்தியது.

தொலைக்காட்சி வரலாற்றில் செம்மையாக ஒளிபரப்பான முதல் நிகழ்ச்சியாகவும் அது அமைந்தது. விக்ரோறியா மகாராணிக்குப் பின்னர் மிக நீண்ட காலம் அரசாள்பவராக எலிஸபேத் மகாராணி பிரிட்டிஷ் வரலாற்றில் இடம்பெற்று, அவரது ஆட்சிக் காலத்தின் 60 ஆண்டு நிறைவை அவர் இப்போது எய்துகிறார். விக்ரோறியா மகாராணி 64 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்.

முன்னதாக, மூன்றாம் எட்வேட் மன்னர் 50 ஆண்டுகள்; மூன்றாவது ஹென்றி 56 ஆண்டுகள்; மூன்றாம் ஜோர்ஜ் 59 ஆண்டுகள் ஆட்சியிலிருந்தனர். பிரதமர்கள் வருவார்கள், போவார்கள்: ஆனால், அரசர்களும் அரசிகளும் அரசாங்கத்தின் ஒருவகையான தொடர்ச்சியைப் பேணுவதாக முடியாட்சிக்கு ஆதரவானவர்கள் கருதுகிறார்கள்.

தன்னுடைய 60 ஆண்டுகள் ஆட்சிக் காலத்தில் எலிஸபெத் மகாராணி 12 பிரதமர்களைப் பதவியில் பார்த்திருக்கிறார். முதல் பிரதமர் சேர் வின்ஸ்ரன் சேர்ச்சில் வயதில் பாட்டனாரைப் போலிருந்தபோது, தற்போதைய பிரதமர் டேவிட் கமரோன் மகாராணிக்கு பேரப் பிள்ளையைப் போன்றவர்.

பொதுவாக இவர்கள் எல்லோருடனுமே நியாயமான அளவில் ஒரு நல்லுறவை மகாராணி எப்போதும் பேணிவந்ததாகவே அரசியல் அவதானிகள் மதிப்பிடுகிறார்கள். இல. 10, டவுணிங் தெருவில் குடிவந்த பலர் முடியாட்சியைப் பாதிப்பதும் அலட்சியப்படுத்துவதுமான போக்குகளைக் கொண்டிருந்தபோதிலும், மகாராணி தனது பெருந் தன்மையைப் பேணுவதில் இதுவரை மிகவும் சிறப்புடன் விளங்குவதாகவே கணிக்கப்படுகிறார்.

பிரிட்டிஷ் முடியாட்சியின் அதிகாரங்கள் பல காலமாகவே சிறிது சிறிதாக பறிக்கப்பட்டே வந்தன. எனினும், 1952இல் எலிஸபெத்

உங்கள் சட்டத் தேவைகள் எதுவானாலும்...

- CONVEYANCING
- CRIME
- EMOPLOYMENT MATTERS
- IMMIGRATION
- LANDLORD & TENANTS
- MATRIMONIAL
- POLICE STATION MATTERS
- TRAFFIC MATTERS
- WORK PERMITS

NAG & CO SOLICITORS

TEL: 020-7737 1211 FAX: 020-7731 1431
UNIT 3 HOLLES HOUSE, MYATTSFIELS SOUTH, LONDON SW9 7JN
EMAIL: NAGANDCO@YAHOO.CO.UK

# எலிஸபெத் மகாராணி வைர விழா



மகாராணி முடிசூடியவேளையில் அதிகாரங்கள் பல அவர்வசமிருந்தன. பிரதமர் ஒருவர் இராஜி நாமா செய்யும் வேளையில், தான் விரும்பும் ஒருவரை அழைத்து புதியதோர் அரசாங்கத்தை அமைக்கும் அதிகாரம் அவரிடமிருந்தது. அதுபோலவே, பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான பிரதமரின் கோரிக்கையை ஏற்கும் அல்லது மறுக்கும் அதிகாரமும் இருந்தது.

ஆனாலும், பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தை அவர் அண்மையில் இழந்தார். 2015 மேயில் நடைபெற விருக்கும் அடுத்த பொதுத் தேர்தலின் பின்னர் பாராளுமன்ற பதவிக்காலத்தை வரையறுக்கப்பட்ட ஐந்து ஆண்டுகளாக நீடிக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டதிலிருந்து இந்த அதிகாரம் முடியாட்சியிடமிருந்து அகல்கிறது.

**தன்னுடைய ஆறு தசாப்த காலத்தில் சகல அரசியல் கட்சிகளையும் சார்ந்த அரசியல் தலைவர்களும் பல்வேறு விதங்களில் லாபங்களுக்காக பயன்படுத்தினாலும், அனைத்து அரசியல்வாதிகளையும்விட உயர்வான மதிப் புடனும் பிரபல்யத்துடனும் மகாராணி இன்னமும் திகழ்கிறார்.**

பிரதமர் ஒருவர் மரணமடையும்போது அல்லது இராஜிநாமா செய்யும்போது, அரசாங்கத்தை அமைக்க எவரை அழைப்பதென்பதற்கான ஆலோசனைகளை அரசியல் நிபுணர்களுடனும் சிரேஷ்ட அரசியல்வாதிகளுடனும் அவர் மேற்கொள்வதும் தற்போது இல்லாமல் போயிருக்கிறது. அரசியல்கட்சிகள்தாமேதமதுதலைவரைத் தெரிவதன்மூலம் இந்த உரிமை மகாராணியிடமிருந்து இல்லாது போகிறது. ஜனநாயகமும், அரசியல் சட்ட அதிகாரம் மிக்க மரபுவழி முடியாட்சியும் இணைந்த பிரிட்டனின் ஒரு சமநிலை அரசமைப்பு, இப்போது ஜனநாயக பண்புகள் இல்லாது போகும் அரசியல்வாதிகளிடம் அதன் சமநிலையை இழப்பதான கருத்தும் நிலவுகிறது.

எடுத்துக்காட்டாக, பாராளுமன்றத்தின் வரையறுக்கப்பட்ட கால எல்லைக்கான புதிய சட்டம், தற்போதுள்ளதுபோன்ற கூட்டு அரசாங்கமொன்றின் பிளவைத் தடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஜனநாயக விரோத செயல்பாடு என்று கூறப்படுகிறது.




**ஜூன் 2 சனிக்கிழமை**

எப்சம், வருடாந்த குதிரைப் பந்தயத்தில் மகாராணி கலந்துகொள்கிறார்.

**ஜூன் 3 ஞாயிறு**

குடும்பமாகவும், அயலவர், நண்பர்களுடனும் வீடுகளிலும் வீதிகளிலும் பொது மக்கள் பங்குகொள்ளும் மதிய உணவு வைபவம்.

தேம்ஸ் நதியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பராம்பரிய, வண்ண படகுகள் பவனி வரலாற்று நிகழ்வாக இடம்பெறும் இப் படகு பவனியில் பிரித்தானியாவின் அரிய பொக்கிஷங்களாக பேணப்படும் பழமையான படகுகள், சிறு கப்பல்கள் உள்பட, பலவகையான கடற்கலங்கள் பங்கேற்கின்றன. இவற்றின் மத்தியில், தங்க நிறத்திலும் சிவப்பு வண்ணத்திலும் அலங்கரிக்கப்பட்ட சிறப்பு கடற்கலத்தில் மகாராணியுடன் அரச குடும்பத்தினர் பவனி வருவர். பற்றசி பாலத்திலிருந்து ரவர் பாலம் வரை இந்த அணிவகுப்பு நடைபெறும்.

**ஜூன் 4 திங்கள்**

பிபிசி தொலைக்காட்சி ஏற்பாட்டில், பங்கிங்ஹாம் மாளிகை முன்பாக மாபெரும் இசை நிகழ்ச்சி. நாடு முழுவதிலும் பல்வேறு சமூகத்தவர்களாலும் தனிப்பட்டவர்களாலும் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுடர்கள் ஏற்றப்படல்.

**ஜூன் 5 செவ்வாய்**

சென் போல்ஸ் தேவாலய ஆராதனை.

அரச பவனி.


பங்கிங்ஹாம் மாளிகை உப்பரிகைக் காட்சி.



# எலிஸபெத் மகாராணி வைர விழா



போக்குவரத்து திணைக்களத்தில் பணியாற்றிய திரு சு. சண்முகம், 1997ஆம் ஆண்டு மகாராணியின் OBE கௌரவ விருதைப் பெற்றார். பெருவீதிகள் பால நிர்மாண பொறியியலில் இவர் ஆற்றிய பங்குக்காக இக் கௌரவம் இவருக்கு அளிக்கப்பட்டது.



போக்குவரத்து திணைக்களத்தில் ஆற்றிய பணிக்காக திரு செ. யோகமூர்த்தி 2011இல் மகாராணியின் MBE கௌரவ விருதைப் பெற்றார்.

பிரிட்டனை ஐரோப்பாவுடன் இணைக்க பிரதமர் எட்வேட் ஹீத் எடுத்த நடவடிக்கைகளும் மகாராணி மக்களுக்கு அளித்த சத்தியப்பிரமாண வாக்கிலிருந்து அவரை மீறவைத்தது. ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் இணைந்து கொண்டதன்மூலம் முற்றிலும் பிரிட்டிஷ் சட்டங்களும் வழமைகளுமென்றில்லாமல், பெருமளவில் பிரசல்ஸின் சட்டங்களும் வழமைகளுமே பிரிட்டனில் கையாளப் படுகின்றன. ஜோன் மேயரும் கோர்டன் பிரவுணும் ஒப்பமிட்ட மாஸ்ரிச்ற், லிஸ்பன் ஒப்பந்தங்கள் இந்த நிலையை மேலும் விசாலப்படுத்தின.


முடிக்குரிய காணிகளின் வருமான வரியை அரசுக்கு செலுத்தும் ஓர் உடன்பாடு 1937 இல் ஏற்பட்டிருந்தாலும், மகாராணியை வருமானவரி செலுத்த வைத்ததன்மூலம் ஜோன் மேயர் பிரபல்யத்தைப் பெற்றார். இளவரசி டயானாவின் மரணத்தை யடுத்து பேரர்கள் வில்லியம், ஹரியுடன் அத் துயர வேளையில் மகாராணி ஸ்கொட்லாந்து, பல்மோரல் மாளிகையில் தங்கியிருந்த போது, லண்டனில் லட்சக்கணக்கான மக்களுடன் அத்துயரில் அவர் இணைந்துகொள்ள ரோனி பிளேயர் தனது அரசியல் நோக்கங்களுடன் மகாராணியை வற்புறுத்தினாரென்றும் கருதப்படுகிறது.

தன்னுடைய ஆறு தசாப்த காலத்தில் சகல அரசியல் கட்சிகளையும் சார்ந்த அரசியல் தலைவர்களும் பல்வேறு விதங்களில் லாபங் களுக்காக பயன்படுத்தினாலும், அனைத்து அரசியல்வாதிகளையும்விட உயர்வான மதிப் புடனும் பிரபல்யத்துடனும் மகாராணி இன்னமும் திகழ்கிறார்.

1997இல் இளவரசி டயனாவின் மரணத்தை யடுத்து எழுந்த கருமேகங்களையெல்லாம் விலக்கி, தனது உயர்ந்த சேவைகளாலும், கௌரவத்தினாலும், மாசற்ற நடத்தையாலும் தன்னை அவர் ஓர் உன்னத நிலையில் உயர்த்தியிருக்கிறார். 2015 செப்ரெம்பர் 10 வரை அவர் மகாராணியாக தொடர்ந்தால், பிரிட்டனை அதிகூடிய காலம் ஆண்ட அரசியாக வரலாற்றை அவர் சாதிப்பார். ■



# மணி விழா காணும் இந்திய நாடாளுமன்றம்




இந்திய நாடாளுமன்றம் தனது அறுபதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடிவிட்டது. மக்களவை (லோக் சபா) மற்றும் மாநிலங்களவை (ராஜ்ய சபா) என்னும் இரண்டு பிரிவு களைக் கொண்ட இந்திய நாடாளு மன்றம், 1952இல் நடந்த பிரதமர் தேர்தலுக்குப் பின் உருவாக்கப் பட்டது.

இந்திய நாட்டின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு தலைமையில் அமைந்த முதல் நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் ஆளும் கட்சியாகவும் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்க்கட்சியாகவும் இருந்தன. ஆனால், இன்று காங்கிரஸ் பெயரில் பல கட்சிகளும் கம்யூனிஸ்ட் கட்சி இருவேறு கட்சிகளாகவும் இருக்கின்றன. பாரதீய ஜனதா தளம் பிரதான எதிர்க்கட்சியாக விளங்குகிறது. இன்னும் பல தனிக் கட்சிகள் இந்த 60 ஆண்டுகளில் உருவாகிவிட்டன. எந்த ஒரு கட்சியும் தனிப்பெரும்பான்மை பெறும் வல்லமையை இழந்து, கூட்டணிக் கட்சிகளின் தயவில் நடக்கும் தொங்கு பாராளுமன்றமே இன்றைய யதார்த்தம் ஆகிவிட்டது.


முதன் முதலில் அமைந்த நாடாளு மன்றத்தின் உறுப்பினர்கள் அனை-வரும் சுதந்திரப் போராட்டத்தில் பங்குபெற்றவர்கள்.

அவர்களிடம் தியாக உணர்வும் நாட்டுப்பற்றும் சபை நாகரீகமும் போற்றத் தக்க வகையில் இருந்தன. ஒவ்வோர் உறுப்பினரும் தான் நினைப்பதைப் பேச அனுமதிக்கப் பட்டார். உறுப்பினர் யாராயினும், அவரது யோசனைகள் ஆள்பவர் களால் பரிசீலிக்கப் பட்டன.



விமர்சனங்கள் சகித்துக்கொள்ளப் பட்டன. விமர்சிக்கும் முறையும் நாகரீகத்தின் எல்லைகளைக் கடக்கவில்லை.

ஆனால், இவை அனைத்தும் அடுத் தடுத்த நாடாளுமன்றங்களில் குன்றத் தொடங்கின. இன்றைய நாடாளுமன்றத்தின் தரம் சில மாநிலங் களின் சட்ட மன்றங்கள் அளவுக்குக் கெட்டு விடவில்லை என்றாலும், வெறுக்கத்தக்க பல சம்பவங்களை அது கண்டுவிட்டது.



2008இல் அமெரிக்கா வுடனான அணு சக்தி ஒப்பந்தத்துக்கு ஆதரவாக வாக்களிக்க உறுப்பினர் களுக்கு லஞ்சம் கொடுக்க முயன்றதாக ஆளும் கட்சியான காங்கிரஸ் மீது குற்றம் சாட்டிய எதிர்க் கட்சித் தலைவர் எல்.கே. அத்வானி, தங்கள் கட்சி உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டதாக பல ருபாய் நோட்டுக் கட்டுகளை மக்களவையில் கொட்டினார். நாடாளுமன்றத்திலும் சட்ட மன்றங்களிலும் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்க வகை செய்யும் மசோதாவை நிறைவேற்ற விடாமல் சில உறுப் பினர்கள் மிக அநாகரிகமான நடவடிக்கைகளில் ஈடுபட்டார் கள். எதிர்ப்பைக் காட்டுவதற்குத் தங்களுக்குத் தெரிந்த ஒரே வழி கூச்சல்தான் என்பது போல் பல உறுப்பினர்கள் நடந்து கொள்கிறார்கள். நாடாளுமன்ற நடவடிக்கைகளில் முக்கியமான பல அமர்வுகளின்போது பல உறுப்பினர்கள் அவைக்கே செல்வதில்லை. அது மட்டுமல்ல. நாடாளுமன்ற உறுப் பினர்கள்மீது வைக்கப்படும் ஊழல் குற்றச்சாட்டுகள் எண்ணிலடங் காதவை.

இவற்றுக்கிடையில் ஆள்பவர்களைக் கேள்வி கேட்க உதவும் தகவல் பெறும் உரிமைச் சட்டம், கல்வி உரிமைச் சட்டம் போன்ற சட்டங்கள் நிறைவேற்றப் பட்டிருப்பது, ஜனநாயகம் இன்னும் உயிர்ப்புடன் இருப்பதைக் கட்டுகின்றன.

ஜனநாயகம் தழைப்பதும் மக்கள் நலனில் உண்மையான அக்கறை கொண்டவர்கள் உறுப்பினர் களாகத் தேர்ந் தெடுக்கப்படுவதும் நாடாளுமன்றம் இழந்துவிட்ட பொலிவை மீட்டெடுக்க உதவ முடியும்.

மக்கள் பிரதிநிதிகளின் சபையான நாடாளுமன்றம், உண்மையிலேயே இந்திய மக்களை நியாயமான முறையில் பிரதிநிதித்துவப் படுத்துகிறதா என்பது ஒரு பெரிய கேள்விக்குறி. தேர்தல் களத்தில் கோடிக் கணக்கில் பணம் கோலோச்சும் வரை இந்த ஜனநாயகத்தை உண்மை யான பொருளில் பிரதி நிதித்துவ ஜனநாயகம் என்று சொல்ல முடியாது என்பதில் சந்தேகமில்லை.

- கோபால்



இந்திய செய்திகள்

## பழங்குடியினத்தவர் ஜனாதிபதி ஆவாரா?

# ஜெயலலிதாவின் தேசிய அரசியல் ஒத்திகை?



ஜனாதிபதிக்கான தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள நிலையில் கடந்த இரண்டு மாதமாக 'யார் அடுத்த ஜனாதிபதி?' என்ற கேள்வி எல்லா அரசியல் கட்சிகளின் மனத்திலும் எழுந்துள்ளது. முதலில் காங்கிரஸ் யாரை ஜனாதிபதியாக நிறுத்தும் என்ற யூகம் அடிப்பட்டது. அந்த சர்ச்சை கடந்த வாரம்தான் முடிவுக்குவந்தது. அந்த சர்ச்சையின் சூடு சிறிது ஓய்ந்து, இரண்டு நாள்கள் மட்டுமே கழிந்த நிலையில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவும், ஒரிஸா முதல்வர் நவீன் பட்நாயக்கும் அடுத்த ஜனாதிபதிக்கான வேட்பாளராக தேசியவாத காங்கிரஸ் கட்சியின் மூத்தத் தலைவர் பி. ஏ. சங்மாவை முன்னிறுத்துவதாக சென்னையில் அறிவித்தனர். பி. ஏ. சங்மா ஏற்கனவே மக்களவைத் தலைவராக இருந்தவர்; பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்; அனைத்துக் கட்சிகளிலும் நண்பர்களை உடையவர். இதைக் கருத்தில் கொண்டே தாங்கள் பி. ஏ. சங்மாவை முன்னிறுத்துவதாக ஜெயலலிதாவும், நவீன் பட்நாயக்கும் அறிவித்தனர். பழங்குடி இனத்தைச் சேர்ந்த ஒருவர் ஜனாதிபதியாவதற்கு இதுவே சரியான தருணம் என்றும் அவர்கள் கூறினார்கள்.

சங்மாவை ஆதரிப்பது என்று ஜெயலலிதா அறிவித்தவுடன், அவரது வழக்கமான பாணியில் பிரச்சாரத்தை உடனடியாகத் துவக்கிவிட்டார். முதலில் சங்மாவை ஆதரிக்க கட்சிகள் முன்வர வேண்டும் என்று அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் கடிதம் எழுதினார். மேலும், மார்க்ஸிஸ்ட் தலைவர் பிரகாஷ் காரத்தையும், பாரதிய ஜனதா கட்சி (பா. ஜ. க.) தலைவர் எல். கே. அத்வானியையும் தொடர்பு கொண்டு சங்மாவுக்கு ஆதரவு கேட்டார். ஆனால், சங்மா ஜனாதிபதி தேர்தலில் நிற்பதை அவர் சார்ந்துள்ள தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவர் சரத் பவார் ரசிக்கவில்லை. ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் முடிவே தனது முடிவாக இருக்கும் என்று சங்மாவிடம் தெளிவாகக் கூறிவிட்டார்.

சங்மாவை காங்கிரஸ் ஆதரிக்க வாய்ப்பு குறைவு. 2004 தேர்தலுக்கு முன்பாக சோனியா காந்தி பிரதமருக்கான வேட்பாளராக நிற்கக் கூடாது என்று முழக்கமிட்டு சரத் பவாரும், சங்மாவும் காங்கிரஸ் கட்சியில் இருந்து பிரிந்து போய் தேசியவாத காங்கிரஸைத் தொடங்கினார்கள். இப்போது, தேசியவாத காங்கிரஸ் கட்சி ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் இடம்பெற்று, அதன் தலைவர் சரத் பவார் மத்திய விவசாய அமைச்சராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போது கூட்டணி சேரவும் சங்மா முதலில் எதிர்ப்பு தெரிவித்தார் என்று ஒரு பேச்சு இருக்கிறது. எனவே, சோனியா காந்தி சங்மாவை நம்புவதற்கு வாய்ப்பு இல்லை.

அதுபோலவே, பா. ஜ. க. வும் அவரை ஆதரிக்க வாய்ப்புகள் குறைவே. 1998 தேர்தல் முடிந்த பிறகு மத்தியில் பா. ஜ. க. ஆட்சி அமைத்தது. அப்போது மக்களவைத் தலைவராக சங்மாவை ஒருமனதாகத் தேர்ந்தெடுப்பதாக எல். கே. அத்வானி ஒப்புக் கொண்டதால் சங்மா வேட்புமனுத் தாக்கல் செய்தார். ஆனால், வெளியிலிருந்து ஆதரவு தருவதற்கு விலையாக மக்களவைத் தலைவர் பதவியை தெலுங்கு தேசக் கட்சிக்கு பா. ஜ. க. கொடுத்தது. அக்கட்சியைச் சேர்ந்த பாலயோகி மக்களவைத் தலைவரானார்; அப்போது காங்கிரஸ் வேட்பாளராகக் களம் இறங்கிய சங்மா தோற்றார். இப்போதும் பா. ஜ. க. சங்மாவை ஆதரிக்க வாய்ப்பில்லை. இதை பா.ஜ.க. செய்தித்தொடர்பாளர் சாநவாஸ் ஹுசேனும் உறுதிப்படுத்தியுள்ளார். 'சங்மாவை எங்கள் கட்சி ஆதரிக்க வாய்ப்பில்லை' என்று அவர் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

பெரிய கட்சிகளின் நிலைப்பாடுகள் இப்படி இருப்பதால், தான் ஜெயிப்பதற்கான வாய்ப்பில்லை என்பதை சங்மாவும் உணர்ந்துள்ளார். அதனால், தன்னை ஜனாதிபதியாக ஏற்காவிட்டாலும் மற்ற பழங்குடியினத் தலைவர்களான கிருச்ண சந்திர தேவ் (காங்கிரஸ்), மக்களவைத் துனைத் தலைவர் கரிய முண்டா (பா.ஜ.க) போன்ற தலைவர்களை ஜனாதிபதி தேர்தலில் கட்சிகள் ஆதரிக்கவேண்டும், பழங்குடியினத்தவர் ஜனாதிபதியாக வருவதே தனது விருப்பம் என்று தெரிவித்துள்ளார்.

சங்மாவின் வேண்டுக்கோளைக் கட்சிகள் ஏற்குமா என்பது இனிமேல்தான் தெரியவரும். ஆனால், இந்த சர்ச்சையில் ஜெயலலிதாவுக்கு ஒரு லாபம் இருக்கிறது. சங்மாவை முன்னிறுத்தி தேசிய அரசியலில் அதிரடியாகத் தன் அடையாளத்தைப் பதிவு செய்திருக்கிறார். வருங்காலத்தில் தேசிய அரசியலில் தன் பங்கை அதிகரிக்கச் செய்வதற்கான முயற்சியாக இதை பார்க்கலாம்.


**சந்திர. பிரவீண்குமார்**

தேசிய அரசியலில் அதிரடியாகத் தன் அடையாளத்தைப் பதிவு செய்திருக்கிறார். வருங்காலத்தில் தேசிய அரசியலில் தன் பங்கை அதிகரிக்கச் செய்வதற்கான முயற்சியாக இதை பார்க்கலாம்.





# புதுக்கோட்டை தேர்தலில் அ.தி.மு.க.வின் ஆர்வம்



எதிர்ப்பு அதிகம் இல்லாத களத்திலும் சுறுசுறுப்பாகச் செயல்படுகிறது அ.தி.மு.க.

ஆளுங்கட்சியாக இருந்துகொண்டு மாபெரும் பலம் படைத்திருந்த போதிலும், புதுக்கோட்டைத் தொகுதி இடைத் தேர்தலில் அந்தத் தொகுதியில் ஏற்கனவே வென்ற கம்யூனிஸ்ட் கட்சிக்கு விட்டுக் கொடுத்து ஒதுங்க முதல்வர் ஜெயலலிதா விரும்பவில்லை. அ.தி.மு.க. சார்பில் கார்த்திக் தொண்டைமான் நிறுத்தப் பட்டிருக்கிறார்.

சட்டமன்றத்தில் தன் கட்சியின் பலத்தை மேலும் பெருக்கிக் கொள்ளும் முயற்சியில் முழு மூச்சுடன் இறங்கிவிட்டார். தொகுதிக்கான இடைத்தேர்தலில் பணியாற்ற அமைச்சர்கள் உள்பட 43 பெர் கொண்ட தேர்தல் பணிக் குழுவை ஜெயலலிதா அறிவித்துள்ளார். இதில் 32 பேர் அமைச்சர்கள். நிதி அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் முதல், அமைச்சரான எம்.எஸ்.எம். ஆனந்தன் வரை பலரும் இந்தப் பட்டியலில் உள்ளனர்.



புதுக்கோட்டை தொகுதியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற முத்துக்குமரன் சாலை விபத்தில் உயிரிழந்தார். இதையடுத்து இத்தொகுதிக்கு ஜூன் 12ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது. பொதுத் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி அ. தி. மு. க. வுடன் கூட்டனி அமைத்துப் போட்டியிட்டது. தேர்தல் முடிந்த சில மாதங்களுக்குள் கூட்டணி காணாமல்போனது. ஏற்கெனவே போட்டியிட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இத்தேர்தலில் போட்டியிடவில்லை என்று அறிவித்துள்ளது. தி.மு.க. ஏனைய கட்சிகளான காங்கிரஸ், ம. தி. மு. க., பா. ம. க., விடுதலைச் சிறுத்தைகள் ஆகியகட்சிகளும்போட்டியிடவில்லை.


அ. தி. மு. க. சார்பில் கார்த்திக் தொண்டைமான், தே. மு. தி. க. சார்பில் ஜாகீர் உசேன், இந்திய ஜனநாயக கட்சி சார்பில் சீனிவாசன் ஆகியோர் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். புதுக் கோட்டை இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் கடந்த 18ஆம் தேதி தொடங்கியது. வேட்பாளர்கள் பலர் வேட்பு மனுதாக்கல் செய்து வருகின்றனர்.

அ. தி. மு. க. வேட்பாளர் கார்த்திக் தொண்டைமான் கட்சியினருடன் சென்று வீடு, வீடாக தீவிரமாக வாக்கு சேகரித்து வருகிறார். இதனையடுத்து, தே. மு. தி. க. வேட்பாளர் ஜாகீர் உசேனும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளார். வேட்பாளர்களின் இந்த தீவிர பிரசாரத்தால் புதுக்கோட்டை தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது.

சங்கரன்கோவில் இடைத் தேர்தலிலும் இப்படித்தான் அத்தனை அமைச்சர்களையும் களம் இறக்கி மற்ற கட்சிகளை மிரள வைத்தார் ஜெயலலிதா. தற்போதும் அதே பாணியைப் பின்பற்றுகிரார். அதிரடி அரசியல் என்பது இதுதானோ! ■

இடைத்தேர்தலில் பணியாற்ற அமைச்சர்கள் உள்பட 43 பெர் கொண்ட தேர்தல் பணிக் குழுவை ஜெயலலிதா அறிவித்துள்ளார். இதில் 32 பேர் அமைச்சர்கள். நிதி அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் முதல், அமைச்சரான எம். எஸ். எம். ஆனந்தன் வரை பலரும் இந்தப் பட்டியலில் உள்ளனர்.







தமிழக செய்திகள்

## ராசாவுக்கும் ஜாமீன்

# ஊழல் விவகாரங்களில் அரசு உறுதியாக இருக்கிறதா?



2ஜி அலைக்கற்றை ஊழல் வழக்கில் கடந்த ஆண்டு பெப்ரவரி 2ஆம் தேதி கைதான மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சரும் திராவிட முன்னேன்ற கழக (தி. மு. க.) உறுப்பினருமான அ. ராசா மே 15ஆம் தேதியன்று உச்சநீதிமன்றத்தால் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார்.

2007 முதல் 2011 வரை தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சராக விருந்த ராசாவின் காலத்தில் அரசின் பொதுச் சொத்தான 2 ஜி அலைக் கற்றையை ஒதுக்கிடுவதில் நடந்த முறை கேடுகளால் அரசுக்கு ஒரு லட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது என 'கன்ட்ரோலர் அன்ட் ஆடிட்டர் ஜெனரல்' என்னும் மத்திய நிதி கண்காணிப்பு



நிறுவனம் தகவல் வெளியிட்டது. மத்திய புலனாய்வுத் துறையின் (சிபிஐ) விடா முயற்சி இந்த பிரச்னையை நீர்து விடாமால் பாதுகாத்து, மத்தியில் ஆளும் காங்கிரஸ் அரசு தனது கூட்டணிக் கட்சியான தி. மு. க. வின் அமைச்சரவைப் பிரதிநிதியை பதவிவிலக வற்புறுத்த வைத்தது. அலைக்கற்றை ஒதுக்கீட்டில் நடந்த குளறுபடிகளால் பயனடைந்த பல தனியார் தொலைத்தொடர்பு நிறுவன அதிபர்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அதிகாரிகளுடன் அமைச்சர் ராசாவும் கைதாகி சிபிஐ காவலில் வைக்கப்பட்டார். சில மாதங்களுக்குள் தி. மு. க. வின் ராஜ்ய சபை உறுப் பினரும் தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி யின் மகளுமான கனிமொழியும் இந்த ஊழலின் மூலம் ஆதாயம் அடைந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கைது செய்யப் பட்டார்.

சி. பி. ஐ. சிறப்பு நீதிமன்றத் திலும், மும்பை உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத் திலும் பல கட்டங்களைக் கடந்து விட்ட 2ஜி அலைக்கற்றை ஊழல் வழக்கில் கைதானவர்கள் அனைவரும் ஒவ்வொருவராக ஜாமீனில் விடுவிக்கப்படுகிறார்கள்.

2011 மே மாதம் கைதான கனிமொழிக்கு, பல கண்ணீர் காட்சி களுக்குப் பின்னர் அதே ஆண்டு நவம்பர் மாதம் ஜாமீன் கிடைத்தது. மேல்விசாரணை தொடங்கும்வரை தனது குடும்பத்துடன் சொந்த ஊரில் வசிக்கவும் அவர் அநுமதிக்கப்பட்டார். சென்னையி லிருக்கும் தனது வீட்டுக்கு அவர் திரும்பிய அன்று, சென்னை விமான நிலையம் முதல் அவரது வீடு இருக்கும் மயிலாப்பூர்வரை பல இடங்களில் வரவேற்பு மற்றும் வாழ்த்துச் செய்திகளைத் தெரிவிக்கும் பதாகைகள் கழக உடன்பிறப்புக்களால் தொங்கவிடப் பட்டன. அதேபோன்ற வரவேற்பு ராசா வுக்கும் கிடைக்குமா என்று நிருபர்கள் கேட்டதற்கு 'யோசிப்போம்' என்று பதிலளித் தார் தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி.

ஆனால், வழக்கு முடியும் வரை தமிழ் நாட்டுக்குச் செல்லக்கூடாது என்ற உச்ச நீதிமன்ற ஆணை கருணாநிதியின் தர்ம சங்கடத்தைத் தவிர்த்து விட்டது.

**உச்ச நீதிமன்றம், தனியார் நிறுவனங்களால் தவறான வழியில் பெறப்பட்ட 122 உரிமங்களையும் ரத்துச்செய்து மறு ஒதுக்கீட்டுக்கு ஆணையிட்டிருப்பது நம்பிக்கை அளிக்கிறது.**

அலைக்கற்றை ஒதுக்கிடுவதில் எண்ணற்ற முறைகேடுகள் நடைபெற்றதாகக் கருத இடம் இருக்கிறது என்பதை ஏற்றுக்கொண்ட உச்ச நீதிமன்றம், தனியார் நிறுவனங்களால் தவறான வழியில் பெறப்பட்ட 122 உரிமங்களையும் ரத்துச்செய்து மறு ஒதுக்கீட்டுக்கு ஆணையிட்டி ருப்பது நம்பிக்கை அளிக்கிறது.

ஆனால், ஊழல் செய்தவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதில் அரசு உறுதியாக இருக்கிறதா என்பது இந்த வழக்கு அடுத்த நிலையை அடையும் போது தெளிவாகிவிடும். ■



**இலங்கைச் செய்திகள்**



# யாழ்ப்பாணத்தில் தூதருக்கு நேர்ந்த அவமானத்தில் இந்தியா மௌனம்

இலங்கையில் தமிழர்கள் மீது இலங்கை இராணுவம் மேற்கொண்ட முள்ளிவாய்க்கால் படுகொலை நிகழ்ந்து மூன்று ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. இலங்கை அரசும் இராணுவமும் அப்படுகொலையை நியாயப்படுத்தும் விதத்தில் வெற்றிக் கொண்டாட்டங்களை இம்முறையும் கொண்டாடின. இராணுவம், பலாலி இராணுவ தலைமையகத்தில் இக்கொண்டாட்டங்களை நடாத்தியது.

உலக நாடுகள் பலவும் இலங்கை இராணுவத்தை நோக்கிக் கண்டனக் குரல் எழுப்பிவரும் இந் நேரத்தில், இவ் விடயத்தில் அதிக அக்கறை கொள்ளவேண்டிய இந்திய அரசு, தமிழர்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் விதத்தில் நடந்து கொண்டிருக்கிறது. யாழ்ப்பாணத்துக்கான இந்திய தூதர் வி. மகாலிங்கம் இந்தக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டிருக்கிறார். இது, உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்களை அதிருப்தி அடைய வைத்துள்ளது.

இது ஒருபுறம் இருக்க, விழாவுக்குச் சென்ற இந்தியத் தூதருக்கு அவமானம் இழைக்கப்பட்ட அவலமும் அரங்கேறியிருக்கிறது. அவரை வரவேற்று உபசரிக்காமல் அவமானப்படுத்தியதுடன், அவருக்கென்று இருக்கைகூட ஒதுக்காமல் இராணுவம் அலட்சியப்படுத்தியிருக்கிறது.



விழாவில் கலந்துகொள்ள வந்திருந்த தூதர் மகாலிங்கத்துக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. முக்கிய பிரமுகர்களுக்கான இருக்கைகளில், வரவேண்டிய பிரமுகர்களின் பெயர்கள் எழுதி ஒட்டப்பட்டிருந்தன. ஆனால், அங்கு மகாலிங்கத்தின் பெயரைத் தாங்கிய இருக்கை எதுவும் இல்லை. இதனால் அவமானம் அடைந்த தூதர் விழா அரங்கைவிட்டு வெளியேறினார்.

வாசலில் அவரைச் சந்தித்த இலங்கை இராணுவ மேஜர் ஜெனரல் சந்திரசிறி, இந்திய தூதரை சமாதானப்படுத்தி மன்னிப்பு கோரினார். உடனடியாக இருக்கை அளித்து அவரை சமாதானப்படுத்தினார்.

*

தாங்கள் நிகழ்த்திய அட்டூழியங்கள் 'பயங்கரவாத ஒழிப்பு'தான் என்று உலக நாடுகளுக்கு நிரூபிக்க இலங்கை அரசும், இராணுவமும் எந்தவித கொடுமைகளையும் செய்யும் என்பது, மீண்டும் ஒருமுறை இந்த கொண்டாட்டத்தின் மூலம் நிருபணம் ஆகியுள்ளது. இதில் கலந்துகொள்ளுமாறு யாழ்ப்பாணத் தமிழர்கள் கட்டாயப் படுத்தப்பட்டனர். தமிழ் அரசு ஊழியர்கள் மிரட்டப்பட்டார்கள். அப்படி இருந்தும் பல அரசு ஊழியர்கள் இதில் கலந்துகொள்ளவில்லை.

அனைத்து தமிழ் மதத் தலைவர்களையும் இராணுவத்தினர் நிகழ்ச்சிக்கு அழைத்திருந்தனர். அவர்களில், உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள சைவ பூசகர்கள் சிலர் மட்டும் நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள். கிறிஸ்தவ மதத் தலைவர்கள் ஒட்டுமொத்தமாக புறக்கணித்தனர். பள்ளிக் குழந்தைகளைக் கூட இராணுவம் விடவில்லை. அனைத்து பாடசாலை நிர்வாகிகளும், அதிபர்களும் மிரட்டப்பட்டனர். அதனால், பள்ளி மாணவர்களும் கலந்துகொண்டனர். தங்களுடைய பெற்றோர்களையும், உறவினர்களையும் பறிகொடுத்த குழந்தைகள், அவர்களைக் கொன்று குவித்த இராணுவத்தினருக்குப் பதக்கம் அளிக்கும் விழாவில் கலந்துகொண்டமை எவ்வளவு மன உளைச்சலை ஏற்படுத்தியிருக்கும்? இலங்கை இராணுவத்தின் இந்த செயல்பாடுகள் மனித உரிமை ஆர்வலர்களை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

உலக நாடுகள், இலங்கை இராணுவம் 'பயங்கரவாத ஒழிப்பு' என்றப் பெயரில் நடத்திய கொடூரங்களைக்கண்டு அதிர்ச்சி அடைந்திருக்கின்றன. இந்த அவப் பெயரைப் போக்குவதற்காகவே இலங்கை, ராணுவம் வெற்றிக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள தமிழர்களை மிரட்டியிருக்கிறது.

தமிழர்களை எதிரிகளாக நினைக்கும் இலங்கை அரசின் கொண்டாட்டம் எதிர்பார்த்த ஒன்றேதான். ஆனால், அதில் இந்திய தூதர் கலந்துகொண்டமை தமிழர்களை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

**ஒரு தேசத்தின் பிரதிநிதியான தூதருக்கு நடந்த அவமரியாதைக்கு இந்திய அரசு இதுவரை அதிகார பூர்வமாக கண்டனம் தெரிவிக்கவில்லை. இதே மாதிரியான அவமரியாதை சீனாவிலோ, பாகிஸ்தானிலோ நடந்திருந்தால் இந்திய நாடாளுமன்றத்தில் பெரும் கண்டனம் தெரிவித்திருப்பார்கள்.**

ஒரு தேசத்தின் பிரதிநிதியான தூதருக்கு நடந்த அவமரியாதைக்கு இந்திய அரசு இதுவரை அதிகார பூர்வமாக கண்டனம் தெரிவிக்கவில்லை. இதே மாதிரியான அவமரியாதை சீனாவிலோ, பாகிஸ்தானிலோ நடந்திருந்தால் இந்திய நாடாளுமன்றத்தில் பெரும் கண்டனம் தெரிவித்திருப்பார்கள். ஆனால், இந்த சம்பவம் குறித்து இந்திய அரசு மௌனமாக இருப்பது, இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையேயான ராஜதந்தர உறவுகள் குறித்த சந்தேகங்களை வலுப்படுத்துவதாகவே உள்ளது. இறுதிப் போரில் இந்திய அரசின் பங்கு குறித்த ஐயங்களையும் இது வலுப்படுத்துகிறது என்று அரசியல் அவதானிகள் கருதுகையில், இராணுவத்தின் இச் செயல்பாடுகளை இந்திய உயர் அதிகாரியொருவர் நேரடியாகவே அவதானிப்பதற்கான வாய்ப்பாகவும் இதைச் சிலவிதங்களில் கருதலாமென்றும் சிலர் தெரிவிக்கின்றனர்.



**– சந்திர. பிரவீண் குமார்.**

# கிலிங்டன் தமிழ்க்கல்விக்கூடம்

**CRANFORD PARK PRIMARY SCHOOL,**
**PHELPS WAY, HARLINGTON, UB3 4LQ**

வகுப்புகள் பிரதி சனிக்கிழமைதோறும் 09.30 - 14.30 வரை

## கற்பிக்கப்படும் பாடங்கள்



- தமிழ் (மழலையர் பிரிவு முதல் ஆண்டு 10 வரை)
- பரதநாட்டியம்
- மிருதங்கம்
- சுரத்தட்டு
- வயலின்
- வாய்ப்பாட்டு
- மேற்கத்திய நடனம்

வெகுவிரைவில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், 11+ வகுப்புகளும், பெற்றோருக்கான கணணி வகுப்புகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம் - நன்றி

கிலிங்டன் தமிழ்க்கல்விக்கூடம்

மேலதிக தொடர்புகளுக்கு **020 8797 1932**
077 1155 8123 / 074 1127 2311
079 1522 8848



# PGA SOLICITORS LLP

PRACTICE AREAS

- Civil litigation
- Commercial Litigation/Disputes
- Conveyancing- Commercial and Residential property
- Landlord and Tenant: Residential and Commercial Property
- Family law
- Immigration law
- Wills and Probate
- Court of Protection and Lasting Powers of Attorney Matters
- Liquor Licencing/Premises Licences
- Neighbour/Boundary Disputes
- Planning law

Contact:

**Mr. Jeyarajan Visvalingam MA, LL.B (Hons,) Solicitor**
**Mrs. Malarvili Umasuthan, Solicitor**

Authorised and Regulated by the Solicitors Regulation Authority. SRA ID 461800.

1048 UXBRIDGE ROAD, HAYES, MIDDLESEX, UB4 0RJ
TEL: 02085736673 FAX: 02085739773 MOBILE: 07943698335

உலகச் செய்திகள்

# பாகிஸ்தானில் அமெரிக்க எதிர்ப்பு உணர்வு

அதிகாரபூர்வமாகப் பார்த்தால் பாகிஸ்தான் அமெரிக்காவின் நட்பு நாடு. பலவிதமான உதவிகளையும் பெற்றுவரும் நாடு. ஆனால், இந்தியாவிலும் ஆப்கானிஸ்தானிலும் பாகிஸ்தானிலுள்ள சில தீவிரவாதிகள் காட்டி வரும் கைவரிசையால் அமெரிக்கா எரிச்சல் அடைந்து, அவ்வப்போது கண்டனம் தெரிவிப்பதுண்டு. ஆனால், இப்போது அமெரிக்காவைப் பார்த்துப் பாகிஸ்தான் கேள்வி எழுப்பியிருக்கிறது.

பாகிஸ்தானில் கடந்த ஆண்டு நேட்டோ படையினர் நடத்திய வான் தாக்குதலுக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மன்னிப்பு கேட்கவேண்டும் என பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர் பிலாவல் பூட்டோ வலியுறுத்தியுள்ளார்.

பாகிஸ்தானின் வடக்கு வஜிரிஸ் தானில், தலிபான்கள் என நினைத்து நேட்டோ படையினர் வான் தாக்குதலை கடந்த ஆண்டு நடத்தியிருந்தனர். இதில் 24 பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். இதற்குப் பாகிஸ்தான் கடும் கண்டனம் தெரிவித்தது.

இச்சம்பவத்தால் ஆப்கானிஸ் தானுக்கான தனது பாதையைப் பாகிஸ்தான் மூடியது, இதனால் அமெரிக்க-பாகிஸ்தான் உறவில் விரிசல் ஏற்பட்டது.

இஸ்லாமாபாத் நகரில் அண்மையில் நடந்த பாகிஸ்தான் மக்கள் கட்சி கூட்டத்தில்




அக்கட்சியின் தலைவர் பிலாவல் பூட்டோ (24) பேசுகையில் ஆப்கான், அமெரிக்கா முதலான பல விடயங்களைப் பற்றியும் பேசினார்.

ஆப்கானிஸ்தானில் நேட்டோ படைகளைக் குவித்து, உலக அளவில் மாற்றம்கொண்டு வர ஒபாமா விரும்புகிறார். தற்போது மீண்டும் ஜனாதிபதி பதவிக்கு ஆசைப்படுகிறார். எனினும், கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நேட்டோ படையினர் நடத்திய வான் தாக்குதலில் 24 அப்பாவி பாகிஸ்தான் வீரர்கள் கொல்லப் பட்டனர், இதற்கு ஜனாதிபதி ஒபாமா பகிரங்க மாக மன்னிப்பு கேட்க வேண்டும். அதற்கு ஒபாமாவிடம் துணிச்சல் உண்டா என்று அவர் கேள்வி எழுப்பினார். ■






ஆப்கானிஸ்தானில் எதிர்காலத்தில் கடுமையான சவால்களை எதிர்நோக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

சிக்காகோவில் ஆப்கானிஸ் தான் தொடர்பில் நேட்டோ அமர்வுகள் நடைபெற்று வருகின்றன. அதில் தான் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டு உள்ளார். நேட்டோ அமர்வுகளில் 50க்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கிறார்கள். ஆப்கானிஸ்தானில் பாதுகாப்பை உறுதி செய்யும் பொறுப்பு உலக நாடுகளுக்கு உள்ளது என்பதை வலியுறுத்திய ஒபாமா, அதற்காக அனைத்து நாடுகளும் அர்ப்பணிப் புடன் செயல்படவேண்டியது அவசியம் என தெரிவித்தார்.

தனது நாட்டின் பாதுகாப்பு விவகாரங்களை ஆப்கானே முழுமையாக மேற்கொள்ள வேண்டுமென்றால் அதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டியது அவசிய மானது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். குறிப்பாக, நிதி மற்றும் ஏனைய உதவிகளை உலக நாடுகள் தொடர்ச்சியாக வழங்க வேண்டுமென்று அவர் கோரியுள்ளார். பிரான்ஸ் உள்ளிட்ட சில நாடுகள் இந்த ஆண்டின் இறுதிக்குள் ஆப்கானிஸ்தானில் நிலைநிறுத்தி யுள்ள தமது படையினரை வாபஸ் பெற்றுக் கொள்ள உத்தேசித்துள்ளன.

2014ஆம் ஆண்டளவில் பாதுகாப்பு கடமை-களை முழுவதுமாக ஆப்கான் படை யினரிடம் ஒப்படைக்க நேட்டோ உத்தேசித்துள்ளது. ஆனால், தற்போது தலிபான்களுக்கு இருக்கும் வலிமையையும் பாகிஸ்தானுடன் அவர்களுக்கு இருக்கும் இணக்கத்தை யும் வைத்துப்பார்க்கும்போது, ஆப்கானால் தலிபானைத் தனியாகச் சமாளிக்க முடியும் என்று தோன்றவில்லை. இந்தப் பின்னணியில் அமெரிக்க அதிபரின் பேச்சு முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது.



## ராசி பலன்






## மே 25 முதல் ஜூன் 7 வரை


ஜோதிச ரத்னா மன்னை
**வி. அகிலாண்டேஸ்வரி**
ஜோதிச, வாஸ்து, பெயரியல் நிபுணர், சென்னை,
தொலைபேசி: 91-44-23711068, 24841969,
65551775, 91+9444151597






### (குரு, சனி, ராகு, கேது போன்ற பெரிய கிரகங்களின் பெயர்ச்சிப்படி)



## மேஷம்

**அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம்**

இந்த இரு வாரங்களும் நீங்கள் எதைச் செய்தாலும் வெற்றிகரமாகவே விளங்கும். புதனும், சுக்கிரனும் பரிவர்த்தனைபெற்று விளங்குவதால் ஸ்ரீநாதயோகம் உண்டாகி திடீர் தனவரவு, ஆடை, ஆபரணம், வாகனங்கள் வாங்குதல் தொடர்பான நல்ல நிகழ்வுகள் உண்டாகி மனம் மகிழ்ச்சி அடைவீர்கள். 2இல் குருவுடன் சூரியன் இருக்க ராஜயோகம் உண்டாகும். அரசாங்கம், மேலதிகாரிகளிடமிருந்து பாராட்டுக்கள், தொழில், உத்யோகம் மேன்மை, சுபகாரியங்கள் கூடி வருதல், கடன்கள் நீங்குதல், கணவன் மனைவிக்குள் அந்நியோன்யம் பெருகுதல் போன்ற நன்மைகள் கூடும். குழந்தைகளிடம் சற்று அதிக கவனத்துடன் இருங்கள். வண்டி ஓட்டும்போது ஜாக்கிரதை தேவை. பெற்றோர்மீதும் அன்புடன் இருங்கள். தொலைதூர பயணம் தவிர்க் கப்படவேண்டும். ஸ்ரீ சுப்ரமணியரை வணங்க நன்மைகள் உண்டாகும்.



## ரிஷபம்

**கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2 பாதம்**

எதையும் துணிந்து செய்து களிப்புடன் இருப்பீர்கள். தனவரவு திருப்தி தரும். புதிய இடம் மனை வாங்கும் யோகம் உண்டு. எனினும், வில்லங்கம் பார்த்து வாங்கவும். ஜென்மகுரு இடப்பெயர்ச்சி உண்டாக்குவார். சனி 5இல் உக்கிரத்தில் உள்ளதால் குழந்தைகளிடம் சற்றே கண்டிப்புடன்கூடிய ஆதரவு காட்டுங்கள். திருமணம் சம்மந்தப்பட்ட விடயத்தை யோசித்து முடிவெடுங்கள். கனவன் மனைவிக்குள் விட்டுக்கொடுத்தல் நன்மை தரும். உத்யோகம், தொழில் இவை மேன்மை பெறும். உடல்நலம் சீராகும். கொடுக்கல் வாங்கல் சரிசமமாக இருக்கும். யூகங்கள் வெற்றிதரும். வாகனம் செலவு வைக்கும். புதிய நபர்களின் சிநேகிதத்தை தவிர்க்க வேண்டும். வெளியூர் பிரயாணம் யோசித்து முடிவுசெய்தல் வேண்டும். ஸ்ரீ மஹாலக்ஷ்மி வழிபாடு பலன் தரும்.



## மிதுனம்

**மிருகசீரிடம் 3,4 பாதம் திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ஆம் பாதம்**

எதை செய்தாலும் தடாலடியாகவே செய்வீர்கள். எதையும் சற்றே சிந்தித்து பிறகு நிதானமாக செய்வதே நல்லது பெரு முயற்சி களைத் தவிர்த்திடுங்கள். கிரகசார நிலை அவ்வளவு திருப்தியாக இல்லை. இருப்பினும் குடும்பத்தில் மகிழ்ச்சியுடன் விளங்குவீர்கள். பந்துகளின் ஆதரவு உண்டு. சகோதரர்களின் உதவி கிட்டும். கணவன் மனைவி உறவுநிலை நல்லபடியாக இருக்கும். கருத்தொருமித்து ஆதரவுடன் இருவரும் விளங்குவீர்கள். தடைபட்ட காரியங்கள் சுபவிடயங்கள் கூடிவரும். கல்வி, உத்தியோகம் இவற்றில் விருதுகள், வெற்றிகள் உண்டாகும். உடல்நலன் நன்றாக இருக்கும். தொழில் ரீதியில் வரவும் செலவும் சமப்படும். சிலருக்கு நாடு விட்டு நாடு செல்லும் யோகம் உண்டாகும். ஆன்மீகப் பயணம்மேற்கொள்வீர்கள். ஸ்ரீ தர்மஸாஸ்தாவை வழிபட நன்மைகள் உண்டாகும்.



## கடகம்

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயில்யம்**

எதை செய்தாலும் நிதானமாகவே செய்தல் வேண்டும். குரு+சூரியன்+கேது+புதன் ஆகிய நான்கு கிரகங்களும் உங்களுக்கு பாதக ராசியான துலாத்தில் உள்ளதால் நன்மையும் பிளவும் கலந்தே இருக்கும். தனவரவு உண்டாகும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டாகும். எனினும் பிறரால் ஏமாற்றப்படவும், தனவிரயம் செய்யவும் வாய்ப்பு உண்டு. எனவே எச்சரிக்கையுடன் இருங்கள். எவரிடமும் பேசும்போது சற்று இதமாகவே பேசுங்கள். எடுக்கிற முயற்சிகள் கடின உழைப்பின் மூலம் வெற்றியாகும். பிள்ளைகளால் மனக்கிலேசம் உண்டாகும். சற்று அன்புடன் கவனித்துக் கொள்ளுங்கள். உத்யோகம், தொழில் பரவாயில்லை. சுபகாரி யங்கள் கூடிவரும். கடன்கள் பைசலாகும். பந்துக்கள் ஆதரவு உண்டாகும். வெளியூர் பயணம் சந்தோசம் தரும். ஸ்ரீ ஆஞ்சநேயரை வழிபட நன்மைகள் உண்டாகும்.



## சிம்மம்

**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

தொழில் ரீதியாக எதையும் செய்யாமல் இருப்பதே நல்லது. புதிய முயற்சிகள், பெரிய முதலீடுகளை யோசித்தே செய்யவேண்டும். உத்யோகம், தொழில் இவை பரவாயில்லை. இடமாற்றம் ஸ்லாக்கியம் இல்லை. பெண்களால் நன்மைகள் உண்டாகும். புதிய வாகனங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். சிலருக்கு இடம், மனை வாங்குகின்ற யோகமும் உண்டாகும். (தொழிலில் மட்டும் பெரிய முதலீடுகள் செய்யவேண்டாம்). சுபகாரியங்கள் நல்லபடியாக நடக்கும். புத்திர வகையில் மேன்மைகள் உண்டாகும். நட்பு வட்டாரம் மூலம் நன்மை களும், ஆதரவும் உண்டாகும். உடல்நலன்மீது சற்றே அக்கறை காட்டுங்கள். மஹான்களின் பெரிய மனிதர்களின் சந்திப்பினால் வெளியூர் பயணம் மகிழ்ச்சி தரும். ஸ்ரீ சிவபெருமானை ஆராதிக்க நன்மைகள் உண்டாகும்.

# ராசி பலன்



## கன்னி

**உத்திரம் 2,3,4ஆம் பாதம், அஸ்தம், சித்திரை 1,2ஆம் பாதம்**

எதைத் தொட்டாலும் பொன்னாக பொழியும். யாவும் வெற்றியாகும். ஜென்மத்தில் சனி வக்கிரம் இருப்பதால் உடல்நலன்மீது மட்டும் சற்றே கவனமாக இருத்தல் வேண்டும். 2ஆம் அதிபதி 10ஆம் வீட்டில் இருப்பதும் 10க்கு அதிகாரி 2இல் இருப்பதும் மிகவும் நன்மைகள் செய்யக் கூடிய விடயமாகும். தொழில் மேன்மை. திடீர் பண வரவு, பொன் ஆபரணங்கள் வாங்குதல்போன்றவகையிலும் மற்றும் சுபகாரியங்கள், புத்திர, பௌத்திர விருத்தி இவைகளை 9இல் நிற்கின்ற குருபக வானும் செய்வார்கள். குருவும் கேதுவும் சேர்ந்து கேள யோகம் உண்டாவதால் எதையும் அறிவு பூர்வமாகவே சிந்திப்பீர்கள். பெற்றோரின் உடல் நலன் மீது கவனம் தேவை. பிள்ளைகளால் நன்மை உண்டு. வெளியூர் பிரயாணம் உல்லாசம் தரும். ஸ்ரீ ஹயக்ரீவரை வணங்கிட நன்மைகள் ஏற்படும்.



## துலாம்

**சித்திரை 3,4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதம்**

மஹாலக்ஷ்மி கடாக்சம் தாண்டவமாடும். புதிய வாகன சேர்க்கை உண்டாகும். பெண்களால் மிகுந்த நன்மைகள் உண்டாகும். புதிய அழகிய ஆடைகளும், ஆபரணமும் வந்து சேரும். கணவன் மனைவிக்குள் பூசல்கள் உருவாகி பிறகு சரியாகும். கணவன், மனைவியின் உடல்நலன்மீது அக்கறை காட்டுங்கள். பிள்ளைகளால் செலவுகள் உண்டாகும். கடன்கள் சிலருக்கு திடீரென்று உருவாகலாம். கோட்சார நிலை திருப்தியாக இல்லை. சுக்கிரனால் மட்டும் யோகநிலை உண்டாகிறது. உடம்பு உஷ்ணாதிக் கத்தினால் பாதிக்கப்படும். அதனால் குளிர்ந்த வஸ்துக்களை சாப்பிடுங்கள். வெளியூர் பிரயாணம் கண்டிப்பாக தவிர்க் கப்படவேண்டும். ஸ்ரீ மஹா லக்ஷ்மியை ஆராதிக்க நன்மைகள் உண்டாகும்.



## விருச்சிகம்

**விசாகம் 4ஆம் பாதம், அனுஜம், கேட்டை**

நீங்கள் எந்த முடிவு எடுத்தாலும் வெற்றிகள் உண்டாகும். தன வரவு திருப்திகரமாகவே இருக்கும். மனம் சந்தோசமாக இருக்கும். கல்யாண மாலை தேடி வரும். ஸத்புத்திர பௌத்திர விருத்தி உண்டாகும். உத்யோக ரீதியாக கடின உழைப்பும், அலைச்சலும் உண்டாகும். புதிய வாகனம் வாங்குவதாயின் தற்சமயம் தள்ளிப்போடுங்கள். உடல் நலனில் நி.றி., சிரீணீக்சீ போன்ற வகையில் அக்கறை காட்டுங்கள். கணவன், மனைவி அந்நியோன்யம் அதிகமாகும். பந்துக்களிடம் எது பேசினாலும் விட்டுக்கொடுத்து இதமாக பேசுங்கள். உத்யோகம், தொழில் ரீதியாக மேன்மைகள் உண்டாகும். கல்வி நிலை மேம்படும். வெளியூர் பயணம் தவிர்ப்பது நலம். ஸ்ரீ மஹாலக்ஷ்மி வழிபாடு நன்மை தரும்.



## தனுசு

**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

எவரிடமும் வீண் விவாதங்களோ வம்புகளோ வைத்துக்கொள்ளாதீர்கள். பிரச்னைகள் தேடி-வரும். தகப்பனாரின் உடல்நலன்மீது கவனமாக இருங்கள். சிலருக்கு பிதுரார்ஜித சொத்துக்கள் வந்து சேரும். கல்யாணம் சம்மந்தமான முடிவுகள் எதுவாயினும் இப்போது வேண்டாம். உடல்நலன் சுமாராக இருக்கும். குழந்தைகள் மீது கனிவுடன் கூடிய கண்டிப்புடன் இருங்கள். Â.Ê.Í. தொடர்பான சிரசு தொடர்பான தொல்லைகள் உண்டாகும். கடின உழைப்பும் அலைச்சலும் தொழில், உத்யோக ரீதியாக உண்டாகும். புதிய வாகனங்கள் வாங்கு கின்ற யோகமும் உண்டாகும். சகோதரர்களுடன் சச்சரவுகள் தோன்றலாம். அமைதியாக இருந்து சமாளிக்கவேண்டும். வெளியூர் பயணம் உல்லாசம் தரும். ஸ்ரீ துர்கா தேவியை வழிபட நன்மைகள் உண்டாகும்.



## மகரம்

**உத்திராடம் 2,3,4ஆம் பாதம், திருவோணம், ஆவிட்டம் 1,2,ஆம் பாதம்**

எதையும் புதிதாக, பெரிய விடயங்களாக செய்யாமல் இருப்பது நன்மை தரும். 9இல் சனி வக்கிரம்பெற்று இருப்பது கார்யஹானி உண்டாக்கும். குருவும் சூரியனும் இணைந்து 5இல் இருப்பதால் புத்திர, பௌத்திர விருத்தி, சுபகாரிய நிகழ்வுகள் போன்ற வகையில் நன்மைகள் உண்டாகும். குழந்தைகளால் மேன்மைகள், தந்தை யின் ஆதரவு, மாமன் வழியில் உதவிகள் போன்ற கிட்டும். வெளியில் போகும்போது வாகனத்தை கவனமாக ஓட்டுங்கள். சகோதரர்களிடம் கனிவுடம் நடந்து கொள்ளுங்கள். நிதானத்துடன் பேசினால் உறவுகள் பலப்படும். தொழில், உத்யோகம் இவை பரவாயில்லை. வெளியூர் பயணம் தவிர்ப்பது நல்லது. ஸ்ரீ நந்திகேசுவரரை வணங்கிட நன்மை உண்டாகும்.



## கும்பம்

**அவிட்டம் 3,4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதம்**

நீங்கள் தெளிவாகவே எதையும் செய்வீர்கள். தைரியத்துடன் எதையும் சமாளிப்பீர்கள். 8இல் சனி வக்கிரம் பெற்று இருப்பதால் அதிக அலைச்சல், தன விரயம், மன உளைச்சல் உண்டாகும். குரு 4இல் சூரியன், கேது, புதனுடன் உள்ள நிலையில் புதிய வாகன சேர்க்கை, திடீர் செலவுகள், பந்துக்கள் வருகை என்பது போன்ற வகையிலும் 5இல் சுக்கிரன் 4இல் புதன் (பரிவர்த்தனை) ஆடம்பரமான ஆடைகள், ஆபரணங்கள் வாங்கும்வகையிலும், செலவுகள் உண்டாகும். மனதில் ஆன்மீகம் தொடர் பான சிந்தனைகள், ஆன்மீக சம்மந்தப்பட்ட இடங்களுக்கு பயணம் மேற்கொள்ளுதல், அதன் தொடர்பான தெய்வ தரிசனங்கள், மகான்களின் சந்திப்பு போன்ற நன்மைகள் உண்டாகும். ஸ்ரீ விக்னேஸ்வரரை வழிபட விக்கினங்கள் நீங்கி நன்மை உண்டாகும்.



## மீனம்

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

எதிலும் வெற்றி காண்பீர்கள். எடுக்கின்ற முயற்சிகளில் தெளிவாகவும், நம்பிக்கை யுடனும் செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். திடீர் வாகன சேர்க்கை யோகம் உண்டாகும். எதிரிகள் பணிந்து விலகிச் செல்வார்கள். கணவன், மனைவி உடல்நலன் மீது மிகவும் அக்கறை காட்டுங்கள். தகப்பனாரின் உடல்நலன் மீது அக்கறையுடனும் அவரிடம் அதிக கனிவுடனும் நடந்துகொள்ளுங்கள். சிலருக்கு திடீரென்று சட்ட விவகாரங்கள் உண்டா கலாம். உத்யோகம், தொழில் ரீதியான முன்னேற் றங்கள் பெற, ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை வணங்கி அபிஷேகம் அர்ச்சனை செய்து அன்னதானம் செய்து வழிபட நன்மைகள் உண்டாகும். திருமணம் குருவின் 5ஆம் பார்வை 7ஆம் வீட்டில் படுவதால் சட்டென்று முடிவாகவும் வாய்ப்பு உள்ளது. கன்னியில் உள்ள சனி பகவான் நிலச் சேர்க்கை உண்டு பண்ணும் யோகமும் உள்ளது. ஸ்ரீ சரபேஸ் வரரை வணங்கிட நன்மைகள் உண்டாகும்.

CARLTON LEISURE
Worldwide Travel & Tours
Presenting the most beautiful places of the World
W: www.carltonleiusure.com E: tours@carltonleisure.com
SOUTH INDIA TEMPLE TOUR 17DAY

BANGALORE, MYSORE
OOTY, KOVALAM
KODAIKANALMADURAI
RAMESWARAM
KUMARAKOM, COCHIN
EGYPT - 7DAY £499


SHARM EL SHEIKH
7 night stay in 5* resort
Package includes hotel flights and airport transfers
உல்லாசப் பயணமா?
உத்தியோகப் பயணமா?
உலகெங்கும் பறந்துசெல்ல
சகலவிதமான விமானச்சீட்டுக்களையும்,
விடுமுறை பக்கேஜ்களையும் மலிவாக,
இருந்த இடத்திலிருந்தே பெற்றுவிட
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

PRASH 020 8385 6867 | 0208385 6854 | 07891 231 571
IATA

ஆன்மீகம்

தெய்வமும் மனிதனாகலாம்-4

ஜி. ரா



# அர்த்தமுள்ள வாழ்வு

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் புகழையும் பெருமைகளையும் போதனை-களையும் அவரது பக்தர்களுக்குக் கிட்டிய அனுபவங்களையும் பகிர்ந்துகொள்ளும் அதேவேளை, அவரது அவதாரம் தொடர்பாக ஏற்பட்டிருக்கக்கூடிய சந்தேகங்களுக்கும் பதிலளிக்கும் நோக்கத்துடன் தொடங்கப் பட்டிருக்கும் இந்தத் தொடருடைய அதே நோக்கத்துடன் உலகில் அதி கூடிய விநியோகம் கொண்ட தமிழக வார இதழிலும் புதிய தொடர் ஆரம்பமாகி இருப்பது வியப்பை ஏற்படுத்துகிறது.

ஒரு நிகழ்வு ஒரே வேளையில் பல ஊடகங் களில் வெளியவாது ஒன்றும் புதியதல்ல.

அதுவே வழமை.

ஒருவரால் எழுதப்படும் ஆக்கம்கூட வேறுவேறு ஊடகங்களில் ஏக காலத்தில் வெளியாவதும் சாதாரணமானதே.

ஆனால், இரண்டு வேறுபட்ட.. எந்த தொடர்பும் அல்லாத இரண்டு ஊடகங்கள் வாயிலாக, தமக்குள் எந்த தொடர்பும் இல்லாத வேறுவேறு ஆக்கதாரர்கள் ஒரே செய்தியை, அதுவும் ஏறத்தாழ ஒரே பாணியில் சொல்ல முற்பட்டிருப்பதானது, அதீத சக்தியின் இன்னொரு பரிமாணத்தை உணர்த்துவதாகவே எண்ணத் தோன்றுகிறது.

அங்கும் இங்கும் ஏல்லா இடங்களிலும் ஒரே நேரத்தில் நீக்கமற நிறைந்திருக்கும் சக்தி மட்டுமே இவ்வாறு புலப்படாத புதிர்களுக்கு காரணமாக அமைய முடியும்.

மனிதனை தெய்வீக நிலைக்கு உயர்த்தும் பணியில் மக்களுடன் மக்களாக உருவமா-கவும் மறைந்து, அரூபமாகவும் உறவாடும் இறைசக்தியின் எண்ணங்களும் இயக்கங்களும் மனித சிந்தனை சந்திக்கு அப்பாற்பட்டவை.

மனித உருவிலும் மறைந்தும் பக்தர்களை ஆட்கொண்டும் இயக்கும் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா என்னும் அந்த சக்தியுடனான தெய்வீக அனுபவங்கள் அற்புதமானவை.

எங்கேயும் கடவுள் நீக்கமற நிறைந் திருப்பதை கண்களால் காணமுடியா திருக்கலாம்.. உணராதிருக்கலாம்.

திரை மறைவில் இருந்து இயக்கும் இறைவனின் லீலைகளே இந்த பிரபஞ்ச அசைவும் அனைத்தும் என்று கூறும் பாபா, எவரும் தனது புத்திசாலித்தனம், அறிவு குறித்து பெருமை கொள்ளக்கூடாது என்கிறார்.

தனக்கிருக்கும் திறமைபற்றியோ, வல்லமை யாலோ கர்வம்கொள்ளக்கூடாது என்றும் சொல்லும் பாபா, நல்ல நடத்தையும் சரியான சிந்தனையும், அனைத்து பட்டங்களையும் கல்வித்திறனையும்விட மேலானது என்றும் கூறுகிறார்.

மனித வாழ்வின் அனைத்து திறனும் மற்றவர் களின் நலன்களுக்காக பயன்படுத்துவதே உண்மையான அர்த்தமுள்ள வாழக்கை என்றும் வலியுறுத்துகிறார்.

■

உங்கள் தேவைகளை எம்மிடம் தமிழிலே உரையாடி உங்கள் பயணத்தை மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்

info@flyplaces.co.uk
www.flyplaces.co.uk

# Flyplaces

Worldwide Travel & Tours

## WORLDWIDE FARES

**COLOMBO** FROM £230 + TAX

**CHENNAI** FROM £160 + TAX

**TORONTO** FROM £199 + TAX

**TIRUCHI** FROM £299 + TAX

**SINGAPORE** FROM £230 + TAX

**TRIVANDRUM** FROM £160 + TAX

QATAR AIRWAYS
JET AIRWAYS
Emirates
SINGAPORE AIRLINES
SriLankan
KUWAIT AIRWAYS
الخطوط الجوية الكويتية
BRITISH AIRWAYS

## EXPRESS VISA SERVICES

TOURIST, BUSINESS & LIFE TIME (OCI) VISAS TO INDIA, AUSTRALIA, SCHENGEN COUNTRIES, REPUBLIC OF CHINA & SRI LANKA.

020 7183 5733

Special Offer!

ONLY FOR THIS WEEK ONLY

## FLIGHT HOTEL TOUR PACKAGES

We have several packages to accommodate almost any need, or you can let us create a custom travel package. Call us to find out more about these and other packages, or let us know where you want to go and we can create just the right custom package for you!

020 7183 4966

மேலதிக தகவல்களுக்கு எமது CROYDON அல்லது HAYES கிளைகளை நாடுங்கள் அல்லது இன்றே தொடர்புகளுங்கள்

55, Lower Addiscombe Road, Croydon, CR0 6PQ
610, Uxbridge road, Hayes, Middlesex, UB4 0RY

IATA
PRICE MATCH GUARANTEE
BOOK WITH CONFIDENCE

VISA MasterCard AMERICAN EXPRESS Maestro DELTA

We accept all major debit & credit cards

Note: All fares mention above are low season, excluding taxes & terms.

மேலதிக விசேட விமான சலுகைகளுக்கும் மேலதிக தகவல்களுக்கும் இன்றே எமது வாடிக்கையாளர் சேவைக்கு தொலைபேசியில் அழையுங்கள்

020 8866 3311

13வது

ஆண்டில் காலடி எடுத்து வைப்பதை முன்னிட்டு
தீபம் தொலைக்காட்சி வழங்கும்

# விசேட சலுகை

ஒரு வருட சந்தா புதுப்பித்தல்

# £35 மட்டுமே!

Tel: 020 8814 6565
www.deepamtv.tv

உலகத் தமிழருக்கு ஒரு தொலைக்காட்சி